67

...d. M. 1803. MARCH 1928 Vol. V. No. 8.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 APR 1928
MADRAS

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்:

கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

...சந்தா உள்நாடு ரூ. 2. வெளிநாடு ரூ. 2-8.

அமெரிக்கன் சில்க் — — — — — அங்கவஸ்திரம்

துய்ய வெள்ளை, உடல் திக்கானபட்டு; தினசரி துவைத்து உடயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இருபக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 5 முழ நீளம் 40'' அகலம்

விலை ரூ. **6—8—0** தான்

கிடைக்கவில்லையே! என்று வருந்தவேண்டாம். ஏற்கெனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்கு மேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள் டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்துவருவதால் முந்திக் கொள்ளுங்கள்!

முத்தையாவ் பாபுலர் ஷர்ட்டுகள்

திக்கான உசத்தி டுயில், பால்போன்ற வெள்ளை, கைதேர்ந்த தையற்காரர்களைக் கொண்டு செய்த மனோகரமான கட்டிங், உறுதியான தையல், உறுதிக்கும் நீண்ட உழைப்புக்கும் உத்திரவாதம் காலருடனும், காலரில்லாமலும் கிடைக்கும். கழுத்தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

நெ. 1 டுயில் ஷர்ட் 1-க்கு விலை ரூ. 2—0—0.
,, 2 காக்கி ஷர்ட் விலை ரூ. 2—4—0.
,, 3 இங்கிலீஷ் டுயில் ஷர்ட் ரூ. 2—4—0.
,, 4 அமெரிக்கன் டோரியா ரூ. 2—4—0.
,, 5 உசத்தி பாப்ளின் ஷர்ட் ரூ. 3—8—0.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, **சென்னை.**

K. S. முத்தையா புத்தக சாலை,

இந்திய மாதா.

மிஸ் காதரைன் மேயோ என்னும் அமெரிக்கமாது பெரும் புரட்டாக நம்மையும், நம் சகோதரர்களையும் தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப் புராணத்தின் சுத்த மொழி பெயர்ப்பு. இதை ஒவ்வொரு தமிழரும் வாசித்து அயல்நாட்டார் நம்மை எவ்வளவு இழிவு படுத்தத்தயாராயிருக்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

விலை ரு. 1 8 0

இந்திய பிதா.

இது, இந்திய மாதாவுக்கு மறுப்பு, "இந்தியபிதா" வென ஸ்ரீமான் ரெங்கய்யர் M. L. A. அவர்களால் எழுதப்பட்டு, லண்டனில் பிரசுரமானது. சுத்தத்தமிழ் மொழிபெயர்ப்பு கன்னி மேயோ, எழுதியிருக்கும், புரட்டுப்புராணத்திற்கு, ஒவ்வொரு வரிக்கும் தக்க சவுக்கடி கொடுத்திருக்கிறார்—இந்திய மாதாவை, பார்த்தவர்கள் " இந்திய பிதாவையும் கட்டாயம் பார்க்கவேண்டும். நல்ல திக்பேபர்—காலிகோ பைண்டு முன் பணம் அனுப்புவோருக்கு மட்டும் ரூ. 2 உடனே விலாசத்தைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

விலை ரு. 2 0 0

பச்சைமோதிரத்தின் மர்மம்.

இது S. S. வாஸன் அவர்களால் எழுதிய ஓர் இனிய நாவல். படிப்பதற்கு மிகவும் இனிமையாயிருக்கும். அழகிய எளிய நடையுடையது.

விலை ரு. 1 0 0

வர்த்தக யுக்தி.

இதில் வியாபாரம் செய்யும் முறை, எதனால் வியாபாரிகள் நஷ்ட முறுகிறார்கள். லாபம் பெறுகிறார்கள், வியாபாரத்தில் என்னென்ன கொள்கைகள் அனுசரிக்க வேண்டும். எப்படி, எப்படி நடந்துகொள்ள வேண்டும். இவை போன்ற இன்னும் அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன. வியாபாரம் செய்பவர்களுக்கும், செய்ய விரும்புவோர்களுக்கும் மற்றெந்தத் தொழில் செய்பவர்களுக்கும் மிகுந்த உபயோகத்தை கொடுக்கக் கூடியது. விலை அணா 12.

தபால் பெட்டி, 99, - - சென்னை.

காலத்திற்கேற்ற நூல்!   காதலர்கள் தேடும் நூல்.

நீங்கள் நெடுநாட்களாய் எதிர்பார்த்திருந்த

இரகசிய புஸ்தகம் தயாராகி விட்டது!

இல்வாழ்க்கையின் - - - இரகசியங்கள்

சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம்.

அழகான பயிண்டு.   நேர்த்தியான அச்சு.

விலை ரூபா **2—0—0.**

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

துறவிகளின் கதியென்ன?

இல்வாழ்க்கை ஏன் சிறந்தது?

இல்லறத்திலிருந்து மோக்ஷ மடைவ தெப்படி?

பெண்ணின் பெருமை, பெண்கல்வி.

நாணம் எப்படி உண்டாயிற்று?

நாணமுள்ள ஸ்திரீயே அதிக இன்பந் தரக்கூடியவள்.

நாம் ஏன் உடைதரிக்க வேண்டும்?

நிர்வாணமாயிருப்பதின் தத்துவ மென்ன?

ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?

காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.

சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?

மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?

கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?

தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?

ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?

அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?

P. T. O.

பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.

சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.

ஸ்திரீ புருஷர்களின் மர்ம அங்கங்களின் அமைப்பும் அவைகளின் நேர்மையான உபயோகமும்.

ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் நுவமென்ன?

சங்கம காலத்தில் கடிப்பது, கிள்ளுவது, தலைமயிரைப் பிடித்திழுப்பது இன்னும் பல தொழில்களால் அதிகமான இன்பம் பெறல்.

மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.

கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள்.

சுகப்பிரசவத்திற்கு வேண்டிய மார்க்கங்கள். பிரச வித்த குழந்தையைப் பிரசவகாலத்தில் ரக்ஷிக்கும் சிரமம்.

முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.

ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.

புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண்மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக் கொள்ளுவதெப்படி?

அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள், சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய விடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுகொலை அநியாயம்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன் போன்ற இரகசிய விஷங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

வாவலன் புஸ்தகசாலை,

தபால் பெட்டி 119,

97, அண்ணுபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.

மனோஹரி.

அழகியதோர் கதை. இதில் விக்கிரமகேதுவின் தீச்செயலால் "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதையும், மனோஹரி என்னும் பெண் தன் தகப்பனார் கிழட்டு அரசனுக்கு மணம் செய்து விக்கப் போனார் என்பதைக் கேள்விபட்டு தனது நந் [illegible] ன் பக்கம் வந்த குணசீலன் என்ற வேறொரு காட்டு இள [illegible] ஆண் வேடம் பூண்டு இரவு 12 மணிக்கு பின் பற்றிச் செ [illegible] நந்தவனத்தில் வைத்து காதலர்கள் இருவருக்கும் நடந்த சம [illegible] ஷணைகளின் பேரில் இருவரும் காதலித்துக் கொண்டவைகளையும் படிக்கப்படிக்க மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும்.

விலை அணா 0 8 0

மணிவடக்களவு

பட்டம் பகலில் போலீசார் முன்னே ஒரு இரத்தினமாலையை திருடி மறைந்த ஒரு சுந்தரமாதின் தந்திரச் செயல்களை விளக்கும் ஓர் அற்புதமான துப்பறியும் கதை.

விலை அணா 0 4 0

மோட்டார் வண்டிகட்கு

யூனிவெர்ஸல் பாட்டரி



யூனிவெர்ஸல் பாட்டரி

பாட்ரி வேண்டும் போது அமெரிக்காவில் செய்யப்படும் பாட்ரிகளில் தலைமை ஸ்தானத்தை வகிக்கும் யூனிவேர்ஸல் பாட்ரி வாங்குங்கள். நாங்கள் உத்திரவாதம் எழுதித் தருகிறோம்.

இந்தியாவுக்கு சோல் ஏஜண்ட்கள்:—

ஸ்டாண்டர்ட் மோட்டர் எலெக்ட்ரிக் ஒர்க்ஸ்

மோட்டர் எலக்ட்ரிக் எஞ்சினீயர்கள், 33, மவுண்ட்ரோட், சென்னை.

ஓம்

லக்ஷ்மி

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி

பிரசுரித்து வரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா

மலர் 5.	பிரபவஷு பங்குனிமீ 1928 மார்ச்மீ	இதழ் 8.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	... 343
2.	ஸரஸ்வதி துதி	... 344
3.	சொல்லாராய்ச்சி	... 345
4.	வாழ்வின்மறுபுறம்	... 350
5.	இயற்கையெழில்	... 352
6.	மதுசாரம்	... 355
7.	நட்டாஜி அல்லது சிவாஜியின் சேனைத்தலைவன்	... 361
8.	காலக் குறிப்பு	... 370
9.	கணிதவிநோதம்	... 373
10.	மேயோ நாட்டில் நியோகம் ...	... 378
11.	தாயின் தரிசனம்	... 380

21037.

சந்தா நேயர்களுக்கு

முக்கிய கவனிப்பு.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30-ந் தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும், அந்தந்த மலரின் முதல் சஞ்சிகையி லிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் உள் நாட்டு நேயர்கள் 10-ந் தேதிக்குள்ளும், வெளி நாட்டார் 15-ந் தேதிக்குள்ளும், சந்தா நம்பருடன் ஆபீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்களாயிருப்பவர்கள், எவ்விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லெட்டர் எழுதினாலும், சந்தா நம்பருடன் எழுத வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் விலாசக் கவரில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினால், மாறுதல் விலாசத்தை, 25-ந் தேதிக்குள், சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும.

லக்ஷ்மிபால் அன்பு கொண்டுள்ள நேயர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும், லக்ஷ்மிக்கு சந்தா நேயர்களாகச்சேர்த்துவிடக் கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால்பெட்டி, 99. சென்னை.

லக்ஷ்மி துதி

மொய்யார் செந்தாமரைப் பூ மேற்
குடி கொள்ளு முத்த நகைச்

செய்யாளை யன்றி மற்றோர் தெய்வ
மின்றிச் செகத்தி னிடை

நய்யார் வெந்தீயிற் கொடிதாய
பாழ்த்த நிரப் பொழித்து

மெய்யாய செல்வப் பெருக்கூடுவப்ப
விடுப்ப தற்கே.

ஸரஸ்வதி வணக்கம்

வெள்ளைக் கமலத்திலே—அவள்
வீற்றிருப்பாள் புக ழேற்றிருப்பாள்
கொள்ளைக் கனி யிசை தான்—நன்கு
கொட்டு நல்யாழினைக் கொண்டிருப்பாள்
கள்ளைக் கடலமுதை—நிகர்
கண்ட தொர் பூந் தமிழ்க் கவி சொலவே
பிள்ளைப் பருவத்திலே—எனைப்
பேண வந்தா ளருள் பூண வந்தாள். (1)

வேதத் திரு விழி யாள்—அதில்
மிக்க பல் லுரை யெனுங் கருமை யிட்டாள்
சீதக் கதிர் மதியே—நுதல்
சிந்தனையே குழ லென்று டையாள்
வாதத் தருக்க மெனுஞ் செவி
வாய்ந்த நற் றுணி வெனுந் தோடணிந்தாள்
போதமென் னாசியினாள்—நலம்
பொங்கு பல் சாத்திர வாயுடையாள் (2)

கற்பனைத் தே னிதழாள்—சுவைக்
காவிய மெனுமணிக் கொங்கையினாள்
சிற்ப முதற் கலைகள்—பல
தே மலர்க் கர மெனத் திகழ்ந்திருப்பாள்
சொற் படு நய மறிவார்—இசை
தோய்ந் திடத் தொகுப்பதின் சுவை யறிவார்
விற்பனத் தமிழ்ப் புலவோர்—அந்த
மேலவர் நா வெனு மலர்ப் பதத்தாள். [3]

வாணியைச் சரண் புகுந்தேன்—அருள்
வாக்களிப்பாளெனத் திடமிகுந்தேன்.
பேணிய பெருந் தவத்தாள்—நிலம்
பெயரளவும் பெயர் பெயராதாள்
பூணியல் மார் பகத்தாள்—ஐவர்
பூவை திரௌபதி புகழ்க் கதையை
மா ணியல் தமிழ்ப் பாட்டால்—நான்
வகுத் திடக் கலைமகள் வாழ்த்துகவே.—பாரதி. (4)

சொல் லாராய்ச்சி

(மோகனூர். கி. வா. ஜெகந்நாதன் வரைவது.)

ஒரு மொழியுள் அமைந்த சொற்கள் பலவும் ஒரே காலத்தில் உண்டானவை யல்லை. அவ்வக்காலத்தே தேவைக்குத் தக்கபடி ஒவ்வொரு மொழியாளர்களும் தமது மொழியிற் சொற்கருவூலத்தை (Vocabulary) விரிவுபடுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். காலப் போக்கைத் தழுவி மொழிகளும் உயிர்த்ததாம். இதுபோழ்து உலகத்தில் பெரும்பாலான மனிதர்கள் அறிந்த 'ஆங்கில மொழி' பிற்காலத்தே வந்த தொன்றாம். அதற்குத் தாய் தந்தையாக லத்தீன் (Latin) முதலிய மொழிகளைக் கூறலாம். இணைந்த மரபினராகிய ஆங்கிலோ சாக்ஸன் (Anglo-Saxon) மரபார் தமக் கென இணைந்த மொழி ஒன்றை ஆக்கிக் கொண்டார்கள். ஆனால் இன்றைய ஆங்கிலம் அக்காலத்து நிலவிய வொன்றாயில்லை. உலகிலுள்ள பெரும்பாலான மொழிகளுள்ளும் அமைந்த பல சொற்களையும் தனது அகட்டிற்றாங்கி அவைகளைத் தனது குருதியிற்றாங்கிக் கொழுமையும் பரப்பும் பெற்றிருக்கிறது அது. ஏனைய மொழிகளும் அத்துணைச் சிறப்புறாஉம் வளர்ச்சி பெறாவிடினும், இற்றைய நிலையையே தொடக்கத்திலும் உற்றிருந்தன எனலாகாது. மொழி முற்கோலுவார் பிறமொழியிலிருந்து சில சொற்களைப் பெற்று அவை கட்கு வேறுவிதமான சட்டையமைத்தும், காரணங் கொண்டும் காரணமின்றியும் சில மொழிகள் கூட்டியும் சமைப்பர். அவைகளுள்ளும் முதற்கண் இன்றியமையாத சில சொற்களை இடுகுறியாகவே அமைத்துக் கொள்வார். சில நாட்களுக்கு முன்னர் ஆசிரியர் பி. தி. ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்கள் சுதேசமித்திரனில் எழுதிவந்த தமிழைப்பற்றிய ஆராய்ச்சியில் இக்கருத்தையே வெளியிட்டுள்ளார். எனவே அவ்வாறு முதற்கண் அமைத்துக் கொண்ட சொற்கள் இடுகுறியாக, மேலும் வேண்டிய சொற்களை ஒரு காரணத்தானே நிறுவித்தமது மொழியை விரிவு படுத்தினர்.

நமது தமிழ் மொழி இன்னும் முதல் நாள் இதுவென ஆராய்ச்சிக்கெட்டா அநாதியா யிருப்பதால், அந்நாள் முதற்கொண்டே அறிஞர்கள்

பல மொழிகளைத் தண்டமிழ் வழக்கிற் கொண்டிருத்தல் வேண்டும். அவைகளுள் புறமொழியிலிருந்து கொண்டனகழிய, ஏனையவைகள் இடு குறிப் பெயர்களை முதலாகக் கொண்டு ஒரு காரணத்தானே உருவுதிரிந் தும் சில எழுத்துக்கள் கூடியும் இருக்கும். அத்தகைய சொற்களை ஆராய்ந்து அதன் காரணத்தை எடுத்து விளக்கினல் அம்முயற்சி எத் துணையோ சுவை பயப்ப தொன்றும். இத்தகைய முயற்சியில் பல அறிஞர்கள் முன்னரே ஈடுபட்டுள்ளார்கள். காலஞ் சென்ற மாகறல் கார்த்திகேயமுதலியார் அவர்கள் தாம் யாத்த 'மொழி நூலி'ல் இத்தகைய சொல்லாராய்ச்சி செய்துள்ளார். பண்டித ம. கோபால கிருஷ்ண ஐய ரவர்கள் நடத்திவந்த நச்சினர்க்கினியனில் அவ்வப்போது மிகவும் இனிமைதரும் முறையில் சில சில சொற்களையாராய்ச்சி செய்தனர். தமிழ் நாடு அவரது உதவியை இனியும் எதிர்பார்க்கும் பேறு பெற்றிலதா யிற்று. பஞ்சாமிர்தம் பத்திரிகையில் காலம் சென்ற அ. மாதவையரவர் கள் இத்தகைய சொல்லாராய்ச்சி செய்யுமாறு அறிஞர்களுக்கு ஒரு வேண்டு கோள் விடுத்துத் தாமும் சில உதாரணச் சொற்களுக்கு வர லாறு கூறியுள்ளார். தமிழர் என்ற பத்திரிகையில் ஒலிக்குறிப்பிலிருந்து பிறந்த பற்பல சொற்களை நிரலே ஒரு பண்டிதர் எழுதியிருந்தார்.

இத்துணையறிஞர்கள் ஆராய்ந்ததனல் அந்தச் சொல்லாராய்ச்சி முடி வடைந்து விடாது. இப்பொழுது இடுகுறிபோல் தோன்றும் ஒரு மொழி நெடுநாளாராய்ந்த பின்னர் விளக்கமாக இன்னகாரணத்தினனே வந்தது எனக் கூறும் படித்தாகிவிடும். எதற்கும் ஆராய்ந்து பார்த்தால் நலம். இவ்வாராய்ச்சியின் பயன்யாது எனின், தமிழர்களின் அறிவின் வளர்ச்சியும், நுண்ணிய சொல்வனையும் ஆற்றலும் நாமறிவதோடமையாது இனியும் அம்முறையில் பல மொழிகளை நாமும் தமிழ் மொழியிற் பதித் தல் கூடுமாகலானும் என்க. இவ்வெண்ணம் முன்னின்றுய்க்கச் சில சொற்களை ஆராய்ந்தனன் எளியேன். அவைவருமாறு. பொருந்துவன கொண்டு அல்லாதன அகற்ற வேண்டுகின்றேன்.

கிண்—ஒலிக்குறிப்பு.

கிண் கிணி
கிண்ணம்
கிணறு } இவை மூன்றும் கிண் என்னும் ஒலிக்குறிப்பின் வழி பிறந்த மொழிகள். கிண்கிணி என்பது குழந்தை கள் அணியும் ஆபரணங்களுள் ஒன்று. 'தண்டை யணி வெண்டயம் கிண்கிணி சதங்கையும் தண்கழல் சிலம்புடன் கொஞ்ச

வேலின்' என்ற திருப்புகழால் அது காலில் அணிவதொன்றென்பது போதரும். அது கிண்கிண் என்னும் ஒலியைத் தருவதால் அப்பெயர் பெற்றதென்க.

கிண்ணம் என்பது ஒரு சிறு பாத்திரத்தைக் குறிக்கும். கிண் என்னும் ஒலி எழுப்புதலால் அஃதாயிற்றும் என்க. இதை வலியுறுத்த ஓசையெழுப்பும் உலோகமாகிய வெண்கலம், தங்கம் ஆகியவைகளால் ஆக்கினவைகளுக்கே வெண்கலக் கிண்ணம், தங்கக் கிண்ணம் என்று பெரும்பாலும் கூறுவதன்றிச் சிறுபான்மை பித்தளைக்கிண்ணம், ஈயக்கிண்ணம் எனவருஉம் வழக்கானும் அறிக.

கிணறு:—இது வெட்டப்படுங் காலத்துக் கட்டப்பாரை முதலிய கருவிகள் கிண் என்னும் ஒலி யெழுப்புதலால் வந்ததாயிருக்கும். பாறையில் வெட்டும்போது அவ்வொலி எழுதல் கண்கூடு. இதற்கியையப் பாறையில் வெட்டப்படும் கிணறுகளையுடைய கொங்கு நாட்டில் கிணறு என்பது பெரும் பான்மை வழங்கப்படுவதும் ஏனைய நாடுகள் போன்று கேணி, துரவு முதலிய சொற்கள் சிறு பான்மையே கூறப்படுவதும் காண்க.

வெற்றிலை.—இது வெற்றி இலை என்பதன் மரூஉவாய் இருத்தல் வேண்டும். வெற்றியைக் குறிக்குங் காலங்களில் அது வழங்கப் படுதலால் என்க.

தாள்—(வைக்கோல் அல்லது உலர்ந்த நெற்பயிர்) இது தாள் (அடி) உடன் கூடியதால் இப்பெயர் பெற்றது.

தாள்—(கதவினையடைத்து இடுவது) தள்ளப்படுவது.

இதனால் பழைய காலத்தில் தள்ளுகின்ற தாழ்ப்பாளே தமிழர்கள் உபயோகித்து வந்தார்கள் என்பதும் அறிக.

கலை—கல்+ஐ=கலை. கற்கப்படுவது. இது தொழிற் பெயர். 'கலா' என்ற வடமொழிச் சிதைவு என்னற்க.

ஆண்மை—ஆணுக்குரிய தன்மை. அது வீரம் என்னும் பொருளில் வழங்கிவருகிறது. ஆதலின் ஆண்மகன் வீரத்தினாலே ஆணுக்குரிய இலக்கணம் பெறுகிறான். இன்றேல் ஆணல்லன் என்ற தமிழர் கருத்தின் குறிப்பு இங்கு போற்றத் தக்கது.

பெண்மை பெட்பு மாதர்	இவைகள் அழகினைக்குறிக்கும். அழகினால் பெண்ணாகிறாள் என்ற தமிழர் கருத்து இங்குப்புலனாவது காண்க.

ஆடி—(கண்ணாடி) எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கிக் காட்டுவதால்.

ஆழி—(கடல்) ஆழம் உடையது.

ஆழி—(சக்கிரம்) அழிப்பது. சக்ராயுதம் பகைஞர்களை அழிக்கும் திறத்ததாகலின்.

• காவணம்—(பந்தல்) காவினுடைய வண்ணத்தையுடையது. சோலையின் அழகையுடையது. பந்தரிடுங்கால் வாழை, கமுகு, முதலிய பல மரங்களையும் குலைகளையும் கட்டி மரங்களடர்ந்த சோலை யென ஆக்குதலால் என்க.

அம்மாஞ்சி—அம்மான்சேய் என்பதன் மரூஉ. மாமன் என்பது பொருள்.

அம்மங்காள்—பார்ப்பனர்கள் மாமன் மகளைக் குறிக்கும் பெயர் இது அம்மான் மகள் என்பதன் மரூஉ.

அத்திம்பேர்—அத்தை புருஷனைக் குறிப்பது. இது அத்தை யன்பர் என்பதன் மரூஉ.

அத்தான்—அத்தைமகன் என்பதன் மரூஉ.

அத்தங்காள்—அத்தைமகள் என்பதன் மரூஉ.

நம்முடன் நெருங்கிய சுற்றத்தினரை அழைக்கும் பெயரெல்லாம் 'அ' என்ற எழுத்தில் தொடங்குவது கவனிக்கத்தக்கது. குழந்தை முதலில் 'அ' என்பதை எளிதில் கூறிவிடுவதால் அம்முதலையே கொண்ட வார்த்தைகள் அதற்குப் புகட்டப் படுகின்றன. அவ்வழி, உறவினர்களைக் காட்டவும் அத்தகைய மொழிகளை அமைத்தும் கவனிக்கத்தக்கது.

அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, அத்தை, அம்பி (தம்பி) அங்கிச்சி (தங்கை) முதலியவைகளை ஓர்க.

பேரன்.—தன்பேரைக் கொண்டவன். பெரும் பாலும் தமிழ்க் குடும்பங்களின் பண்டைய வழக்கம் என்ன வெனில் தாத்தாவின் பெயரையே பொத்திரனுக்கு வைப்பதாம். அந்தப் பாட்டனார் பேரை உடையவன் ஆகையால் அவருடைய பேரன் ஆனான். அதாவது பாட்டனா

ரது பேரன் ஆனுன் என்க. பேர்த்தி என்பதும் இவ்வழியே பாட்டியுடைய பேரைக் கொள்வதனுல் என்க.

குழந்தை—குழகுடைமையால். குழகு—இளமை.

குழவி என்பதும் அற்றே.

ஓரகத்தி—(ஓர்—அகத்தி) ஒரு வீட்டிலேயே ஒன்றியிருந்து இல்லறம் நடாத்து பவள். இதனுல் தமிழர்கள் சகோதர ஒற்றுமை மிக்கவர்கள் என்றும் ஒரே குடும்பமாய் வாழ்ந்தனர் என்பதும் போதரும்.

நாத்தி—என்பதன் காரணம் தெரியவில்லை. அறிஞர்கள் ஆய்க.

வீடு__விடுதி—விடுஎன்பதிலிருந்து வந்தன. தமது பொருளை விட்டுவைக்கும் இடம்.

அறை__அறுக்கப்பட்டது. ஏனைய இடங்களிலிருந்து தனியே இடம்பிரித்தமைக்கப் பட்டது.

நாதாங்கி—சங்கிலியை மாட்டும் வளைவான கம்பி. அது நிலையில் உள்ளது. நாவைப் போன்ற சங்கிலியைத் தாங்குதலால் அப்பெயர் பெற்றதாம்.

நிலை—நில் + ஐ. இயங்காமல் நிற்பது.

கதவு—கதுவுவது (அணைவது) நிலையையணைவது.

இரேழி—இதனை நடையென்று கூறுவார்கள். இது இடைகழி என்பதன் மரூஉ. வாயிலிற்கும் வீட்டிற்கும் இடையிலே கழிபோன்றிருத்தலின் என்க.

குச்சு__குச்சிகளால் வேய்ந்த வீடு.

கழி__(குச்சி) கழிக்கப்படுவது. இலைகளையும் கணுக்களையும் கழித்து விடுவதனுல்.

கீற்று__மட்டையிலிருந்து கீறுவதனுல், கீறுதல்__கிழித்தல் பிளத்தல்

மாடி, மாடம், மாடு } மாடு என்பது இடம் அல்லது வீட்டைக்குறிக்கும். மாடம் என்பதும் அவ்வாறே. சிறந்த வீட்டைக் குறிப்பதும் ஒன்று. சிறப்பிற்குரிய மேற்பாகத்தைப் பிற்காலத்தில் மாடி என்றனர். அதுவும் மாடம் என்பதன் திரிபு. அன்றி மாடு + இ என்று கொண்டு (விசாலமான சிறந்த) இடத்தை யுடையது என்பதும் ஒன்று.

வாழ்வின் மறுபுறம்

(பி. எஸ். குமாரஸ்வாமிப் பிள்ளை மொழி பெயர்த்தது.)

கலையுந் தொல்லையும் துன்பக்கடலின் ஆழ்த்த,
தொலையா ஒரு தினமேனுந் துன்பமே. அறிவே குன்ற,
வறுமையே துன்பே வாட்டும் இவ்வாழ்வின் மறுபுறம்
செறிதரு சீர்வளம் செல்வம் காண்பினுங் காண்பீர் !
ஆங்கோர் தீவாம் ; காதம் பலவே கடந்து காண்மின் !
சென்றேன் பன்னாள், கண்டேன் காருண்யம்,
என் சிறுபடகுடன் எய்தினன் அக்கரை—எந்நோவ்வொழிய—
என் உளங்களிக்கக் கண்டேன் ; ஆணும் பெண்ணுங்களிகூர்ந்திருக்க
புன்சிரிப்புடனே வருந்தித்தாங்கிய மாக்களும் உளரே ;
பூவும் பொறையும் நிறைந்த பூங்கொடி போல்வர்
ஆவின் பாலும் அன்னமும் அளித்தே, காவலுடனே ஓர்
கவின் மாடமும் அளிக்க, வெகு நாள் பழகிய மேயோவரென,
பகர்ந்த பண்பொழியும் மிகுந்த உபசாரமே !
கொணர்மின் சுற்றமுமனையுமிங்கே ; வேண்டுவதொன்றில்லை ;
சுற்றித்திரிந்தேன் பற்பல நாட்கள், தொலைத்தும் கண்டிலேன்
குற்றமே, பாவமே, கொடுந்தொழில், கெடுந்தொழில்.
எங்குமே யின்பம்! என்றும் இன்பம் ! எவ்விடத்துறைய என்றே திகைத்தேன்.
பூவுங்காயுநிறைந்ததோர் சோலை ; அவண் வண்டுகள் பாட மயிற்கூத்தாட
அவயினைக்கண்டு களித்தாள் கவலையுமுண்டோ?
ஓர் புறம் திரை கடலோங்கியொலிக்க குன்றேமலையோ
மறுபுறங் காண்மீர் ! கதிரவனுங்குளிர் காட்சியாமே !
மதியும் மாக்களும் காய்வர் மதனாலே ; வேண்டியதென்னை !
பிழைக்கப்பொருள்கட் குழைக்கவும் வேண்டாம், பிணியில்லை!
அஞ்சுதருக்களும் ஆக்கப்பொருள்களும் மிஞ்ச
முப்பூவும்விளைவுந்தருமே !

தமிழ்நா... சென்னை-600 008
210377

திதிக்குங்கனிகள் செழிக்குப் பூண்டுகள் மறைக்கும்
வானம் மலர்ப்பந்தர்களே !
எந்நாட்டிலுமே இவ்வளங்கண்டிலேன், இந்திரர்க்குகந்த
தெனவே திகைத்தேன்.
மாதம் மும்மாரி பொழிந்து செழிக்கும் மாதவர் வாழும்
மாநாடிதுவோ ?
தென்றல்வீசுமே என்றுமிவ்விடம், தினசரி மன்றற்குழாம்
மகிழ்ந்தாடுவர் பாடுவர்.
வறுமையே யிலையெனில் மானிடர்க்கென்ன ! திகைத்தேன் !
தீவிரத்துடனே யெழுந்தேன் ! முன்னோர்தவமோ ? முப்புரருளோ.
என்னே இதுவெலாம் ! சேன்சோதனையே !
தேவரேயாயினும் மூவரேயாயினும் செல்வம் விரும்பா
மாதவராயினும் இயற்றிய அவரவர்வினை தமக்கேற்ப
நன்மையும் பெறுவர் ! நலமமர்ந்திருப்பர் ! நால்வகை யோர்க்கும்—
நான் சாற்றுவனே ! உண்மை ! உண்மை ”

குறிப்பு.—இக்கவி—ஆங்கிலத்தில் என்றும் அழியாப் புகழெய்திய இரண்டு மூன்று சிரேஷ்ட கவிவாணர்களின் கருத்தைத்தழுவி நம் நாட்டுக்குப்பொருந்துமாறு எழுதப்பட்டிருக்கிறதை நமது நேயர்களில் பலர் அறிந்து கொள்வார்கள். பல தேசங்கள் காணப்படினும் வழுஉக்கள் மறைந்திருப்பினும் இதன் கருத்தை மட்டினுமெ கவனிப்பார்களெனக்கருதியுள்ளோம்.

உடுவிலுள்ள ஒரு சிறு வியாபாரியும் அவனைக் காதலித்து அவனோடு கூட ஓடி அகப்படாது ஒளிந்துத் திரிந்த ஓர் பதினொரு வயதுப் பெண்ணும் யாழ்ப்பாணம் பெரிய கோட்டு நீதிபதி மெஸ். றெக் அவர்கள் முன்போய் வெளிப்பட்டனர். ஷை பெண் மலாய் நாடுகளில் உத்யோகம் பார்த்த ஒரு தனவந்தரின் மகளாகும். ஷை வியாபாரி ஷை பெண்ணைக் களவாண்டானென்று குற்றஞ் சாட்டப்பட்டிருந்தான். அவன் கோர்ட்டில் தான் குற்றவாளி என்று ஒப்புக்கொள்ள நீதிபதி அவனுக்கு ரூபாய் 250 அபராதமும் அன்று கோர்ட்டு முடியும்வரை சிறையும் விதித்தனர். அதன்பின் நீதிபதி, அப்பெண்ணை வித்தியாசம் நோக்காது அவனுக்கே விவாகஞ் செய்து வைக்கும்படியும் அல்லாவிடில் அவளது கீர்த்திக்கு அது எக்காலமும் பங்கமா யிருக்கு மென்றும் அப்பெண்ணின் தந்தைக்குக் கூறினர்.

இயற்கையெழில்

(காவிரிக்கரையில் கண்ட கட்சி.)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

1, கண்களிக்க மேவுகின்ற கவின்வனப்பார் காட்சியிதைக்
கண்டபோதே
மண்களிக்க வருமியற்கை வளப்பெருமை மனத்தகத்தே
மண்டு மன்றிப்
பண்களிக்கப் பாடுமிசை வண்டினங்கள் குயிலினங்கள்
பரப்புமோசை
எண்களிக்க இதயத்தே ஓங்கி வளரும் பொய்யின்
றெல்லா முண்மை

2. காவிரிக்கும் காவிரியின் கரையதனில் நண்பருடன்
கலந்து சீரார்
பூவிரிக்கும் மணம் நுகர்ந்து புனல்விரிக்கும் ஒலிகேட்டுப்
பொங்கு தென்றல்
தூவிரிக்கும் இன்புணர்ந்து தெள்ளுபுனல் அள்ளியதன்
சுவயை மாந்திப்
பாவிருக்கும் புலவர்நெஞ்சம் கூட்டுண்ணும் இயற்கையெழில்
பார்த்தோமம்மா!

காவிரிக்கும்—சோலைகளை உண்டாக்கும் இதில் ஐம்புலன்களும் நுகரும் இன்பம் கூறப்பட்டது காண்க.

3. துள்ளிவரும் கன்றினத்தின் வெரின் நாவால் தடவிமகிழ்
சுலவும் ஆக்கள்
எள்ளரிய மரகதப்பாய் விரித்தனைய புற்றரையில்
இனிதே மேய்ந்து
தெள்ளுபுனல் அருந்திஅகம் படர்கருத்தால் தீங்குரலால்
சேயைக் கூவிக்
கொள்ளையன்பு காட்டிநிரை குழுமிவரு தோற்றமுள்ளம்
கொள்ளை கொள்ளும்.

வெரின்—முதுகு. அகம்—வீடு. கொள்ளையன்பு—மிகுதியான அன்பு. நிரை—பசுக்களின் வரிசை.

4. இழுமெனவே படர்கின்ற காவிரியிற் கயல்மீன்கள்
எழுந்து லாவப்
பழுதுபடரும் கருத்துக் கிழக்கொக்கு கரையினிலே
பதுங்கி நிற்கப்
பொழுதமைந்த தெனவறிந்த புள்ளினங்கள் கூட்டின்பாறி
போதக் கூடி
இழைதவழு மாலைபோற் பறந்துவரும் எழிலதுதான்
என்னே என்னே !
பொழுதமைந்தது—பொழுது போயிற்று.

5. வெய்யவன் தன் கிரணமெலாம் அடக்கிவிட்டான்
செக்கர்நிற மேனி கொண்டான்.
மையெனும்நல் முகிலினங்கள் பொன்னுருக்கொண்
டவ்வானில் வயங்கா நிற்கும்
தய்யநதி யிற்புனலோ சொன்னமுரு
கிப்போந்த தோற்றம் காட்டும்
ஐயவிதை உரைப்பதொரு நாவின்அமை
யுங்கொல்அழ கழகே அம்மா !
வெய்யவன்—சூரியன். செக்கர்நிறம்—சிவப்புநிறம்.

6. சந்திரன்தன் களக்கமிலாத் தண்ணொளியைக்
கொண்டுலகில் தலையைக்காட்டும்
இந்தவெழில் என்னுரைப்ப தெங்கணும் நல்
இன்பமே இசைந்த தன்றிச்
சந்தனமும் பன்னீரும் கலந்துதிமிர்ந் தால் அனைய
தகைமை கண்டோம்
கந்தபிரான் திருஉருவம் கண்ணெதிரே நின்றதைக்
கண்டேன் நானே.

இயற்கை எழிலேயே கந்தபிரான் திருவுருவம் அவைந்து கிடக்கின்றது. என்னை ? இயற்கையே அவனதுருவ மாகலின் என்க. சந்திரோதயம் ஆனபோழ்தில் இயற்கை தனது முழுவனப்பில் இலங்கியதாக அக்காலை அது முருகனாகவே தோற்றிற்றென்க.

திங்களொளி காவிரிச்சீர் சேர்கரையின்
புற்றரை இன் தென்றலோதை

பங்கமிலாத் தோற்றம் ஒலி மெய்யுணர்வு
தந்திடவே படரும் எண்ணம்
தங்கவிலை நெஞ்சகததே வானத்தில்
பறப்பவன்போல் தழைக்கும் இன்பம்
எங்குநிறையும் உருவம் ஆகிவிட்டேன்
எனைமறந்தேன் இயற்கை என்னே !

மெய்யுணர்வு—உடலிற்படும் 'ஊறு' என்னும் பரிச உணர்ச்சி.

8. இயற்கையிலே முருகன் உருக் கண்டிடலாம்
இயற்கையிலே கூடல் வீடாம்
இயற்கையிலே மனக்கவலை வீட்டிடலாம்
அமரரென ஏற்றம் ஆவோம்
செயற்கையிலே நகர்வாழ்க்கைச் சிறப்பினிலே
இவையுண்டோ செப்புவீர்மற்
றியற்கையெழிற் சிறப்பில்லை துறப்பில்லை
மறப்பில்லை இன்ப மாமே

கி. வா. ஜெகந்நாதன்.

இரண்டு வாரத்திற்கு முன் களுத்துறைக்குச் சமீபத்தில் சில வாலிபர் சேர்ந்து இரவில் முயல் வேட்டைச் சென்ற போது ஏதோ சத்தம் வந்த திசை நோக்கிச் சுட்டனராம். ஒரு வெடிப்புக்குப் பிறகு புஸ், புஸ் என்ற சத்தம் பலமாய்க் கிளம்பவும் பல வெடிகள் தீர்த்துக கையிலிருந்த மின்சார வெளிச்சத்தைக் கொண்டு பார்க்கும்போது பெரியதோர் மலைப் பாம்பென்று கண்டார்கள். பிறகு அதை ஓர் வண்டியில் போட்டு ஊருக்குக் கொண்டு வந்தபோது ஓர் கனவான் அப்பாம்பி விருந்து நெய் எடுக்க 45 ரூபாய்க்கு விலைக்கு கேட்டாராம். பாம்பு நெய் வெட்டு காயங்களுக்குக் கைகண்ட மருந்தாம். நெய் இறக்கக் கொடுக்காமல் சுட்டவர்கள் அதன் தோலைப் பதப்படுத்த எடுததுச் சென்றூர்கள். இம் மலைப் பாம்பின் நீளம் 15 அடி. தடித்த விடத்தில் சுற்றளவு $17\frac{1}{2}$ அங்குலம் இருந்ததாம் என்று ஒரு நிருபர் எழுதுகிறூர்.

மதுசாரம்

(காபிரைட்)

(ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம்பிள்ளை எழுதியது)

(முன் 340ம் பக்கத் தொடர்ச்சி)

VI

மதுசாரம் இரத்த அணுக்களைக் கெடுக்கிறது.

உயிர்வாயு அல்லது தகனவாயு, உஷ்ணத்தையும் சக்தியையும் கொடுப்பதற்குக் காரணமாகின்றது.

எந்தப் பொருளையுந் தகிப்பதற்குத் தகனவாயு (Oxygen) முக்கியமாவது போலச் சூக்குமரந்திரத்துள்ளே ஆகாரத்தைத் தகிப்பதற்குத் தகன வாயு அல்லது உயிர்வாயு முக்கியமாகின்றது. இதததகனத்தினால் (Oxydation) இரண்டு காரியங்கள் சம்பவிக்கின்றன :—

(1) தகனவாயு, சூக்குமரந்திரங்களுக்கு உஷ்ணத்தையும் சக்தியையுங் கொடுக்கிறது. அதாவது வேலை செய்யச் சக்தி கொடுக்கிறது (Work Power) உஷ்ணமுஞ் சக்தியுமில்லாவிடின் அவை செத்துப் போம். உஷ்ணமுஞ் சக்தியுந்தான் அவற்றிற்கு ஊக்கத்தைக் கொடுக்கிறது. சூக்குமரந்திரங்களின் உயிர் அவற்றின் ஊக்கத் (activity) தைப் பொறுத்திருக்கிறது.

(2) தகனத்தினால் விஷங்கள் அடிக்கடி சிதைந்து அழிந்து போகின்றன. எந்தப் பொருளினாலாகிலும் இத்தகனம் தடைபடுமாயின் சுகங் கெடுகின்றது.

தகனவாயு, கரி (carbon) யோடு சேருவதால் உஷ்ணத்தைக் கொடுக்கிறதென்பதும், அதே சமயத்தில் விஷவாயுவான கரியமிலவாயு (Carbonic acid gas) வெளிப்படுகிற தென்பதும் உனக்குத் தெரியும்.

தகனவாயு, நிலக்கரி (Coal)யிலுள்ள கரியோடு சேருவதால், உஷ்ணத்தையும், யந்திரத் (Engine) திற்குச் சக்தியையுங் கொடுக்கிறதல்லவா ? அது போலத் தகனவாயு, நாமுண்ணும் ஆகாரத்திலுள்ள கரியோடு சேருவதால் உஷ்ணத்தையும், தேகத்திற்குச் சக்தியையுங் கொடுக்கிறது. இவ்வுஷ்ணமும் வேலைக்குச் சக்தியும், பெரும்பான்மையும் தகன வாயுவின்

உதவியைப் பொறுத்திருக்கிறது. தகனவாயு குறையுமாயின் உஷ்ண முஞ் சக்தியுங் குறையும், தகனவாயு, உஷ்ணம், சக்தி, வேலைக்குப் பலம் இவற்றிற்குக் காரணமாவது மன்றித் தேகத்தையுஞ் சுத்தமாக வைக்கிறது.

குறைந்த உயிர்வாயுவினால் குறைந்த வுஷ்ணம்,

குறைந்த உஷ்ணத்தால் குறைந்த வேலை

எரிந்து கொண்டிருக்கும் மெழுகுவர்த்தி (Candle) யின்மேல் அகன்றவாயையுடைய ஒரு புட்டியைக் கவிழ்த்து வைத்தபோது, அவ் வர்த்தி சிறிது எரிந்து உடனே அணைந்து போனதை நீ பார்த்திருப்பாய். அது ஏன் அணைந்தது? புட்டிக்குள்ளே காற்றிலிருந்த உயிர்வாயு வெல் லாம் எரிந்து விட்டது. இன்னும் எரிவதற்குப் புட்டிக்குள் உயிர்வாயு வில்லை. நெருப்பு மூட்டு மிடத்தில் சாம்பர் அடைத்துக் கொண்டால், மேற் சொன்ன காரணத்தாலேயே நெருப்பு அணைந்து போகிறது. கருமான் நெருப்பைக் குறைக்க வேண்டுமானால், உலைக்களத்தைச் சாம்பரால் மூடுகிறான். அதனால் உயிர்வாயு குறைந்து போகிறது. அவ னுக்கு அதிக தீ வேண்டுமானால், அவன், உலைத்துருத்தி கொண்டு உயிர் வாயுவை யூதுகிறான். மிக்க விரைவாக வோடுவது மிகக்கடினமான வேலையாகும். அதற்கு அதிக உயிர்வாயு வேண்டும். அதிவிரைவாக மூச்சு விடுகிறதினாலே உஷ்ணம் அதிகரிக்கிறது. அதனால் உடம்பில் வேர்வை யுண்டாகிறது. உயிர்வாயு குறையுமாயின் ஓட முடியாது.

குளிர் காலத்தில் விரைவாக நெடுமூச்சு உண்டாகின்றது. வெயிற் காலத்தில் அவ்வாறில்லை. குளிர்காலத்தில் அதிக உஷ்ணம் வேண்டிய தாதலால் அதிக உயிர்வாயு வேண்டி யிருக்கிறது.

மதுச்குடியர்கள் குளிர்காலத்தில் மதுசாரத்தையுட்கொண்டால் தேகத் தில் குளிர் தோன்றாமல் உஷ்ணமாயிருக்கு மென்றெண்ணி மதுசாரத் தைக் குடிக்கிறார்கள். அம்மதுசாரம் வயிற்றிற் போய், இரண்டு நிமிஷத் தில் இரத்தத்திற்கலந்து, வேகமாய்த் தேகமெங்கும் பாய்ந்து, 15 லிரு ந்து 24 மணி நேரந் தேகத்தில் தங்கி மெல்ல மெல்லத் தகனமாகிறது. அம்மதுசாரம் இரத்தத்திலுள்ள அணுக்களைச் சேர்ந்ததும் அவற்றிலுள்ள நீரை யபகரித்ததும், அவற்றைச் சுருங்கச் செய்தும், அவ்வணுக்களின் மேற் பரப்பையும், அவ்வணுக்கள் சூக்குமரந்திரங்களுக்கு உயிர்வாயுவைக் கொண்டு போகுஞ் சக்தியையுங் குறைத்து விடுகின்றது. இப்படிச்செய்

வதால், குறைவான கரியமிலவாயுவை மீண்டுங் கொண்டுவந்து சேர்ப்பதிலுைலே விஷப்பொருள் அதிகமாக இரத்தத்தில் தங்குகிறது.

மதுசாரம், உயிர்வாயுவையும், உஷ்ணத்தையும், சக்தியையும் குறைக்கிறது.

மதுசாரம், தேகத்திற்கு அனலையும் ஊக்கத்தையுங் கொடுக்கும் உயிர்வாயுவின் தகன சக்தியை இரண்டுவகையில் குறைக்கின்றது.

இரத்தத்தில் விஷப்பொருளை அதிகமாகச் சேர்த்தலால் தகனசக்தி குறைகின்றது.

ஒரு பிரஞ்சு இரசாயன சாஸ்திரி ஒரு குடியனுடைய இரத்தத்தைச் சோதித்துப் பார்த்ததில் அதில் 117 பங்கு விஷப்பொருளிருக்கப்பார்த்தனராம். அம்மனிதனுடைய இரத்தம் மதுசாரஞ் சேராமல் சுத்தமான இரத்தமாயிருந்திருக்குமானுல், அவர் அதில் 8 பங்கு தான் பார்த்திருப்பாராம். சாம்பர்மூடிய நெருப்பு எப்படி எரியாமல் அடங்கியிருக்குமோ அது போலும், இரத்தத்திலுள்ள அசுத்தப்பொருள் தகன சக்தியைத் தடுக்கிறதென்று முன்னமே தெரிந்திருக்கிறோம். ஆதலால், வேலை செய்பவனுக்கு மதுசாரத்தைப் பார்க்கினும் பெரும்பகை வேறொன்றுமில்லை. அவன் வேலை செய்வதற்குச் சக்தி, இரத்தத்தின் செயலால் ஆகாரதகனத்திலிருந்துண்டாகின்றது. இச்செயலை மதுசாரங் குறைக்கின்றது. ஆகவே, மதுக்குடியில்லாமலே அதிகமாக நல்ல வேலை செய்யக்கூடும்.

1892ம் ஆண்டில் மேல் நாட்டில் இருப்புப்பாதையில் (The Western Railway) 200 மைல் தூரமிருந்த அகலப்பாதை (Broad Guage) யைக்குறுகலான பாதை (Narrow Guage) யாக மாற்றவேண்டியிருந்தது. அதற்காக எல்லாவண்டித்தொடர்களும் நிறுத்தப்பட்டன. கைதேர்ந்த 5000 ஆட்கள் வேலைக்கு அமர்ந்தனர். அவ்வேலை இத்தனை மணி காலத்திற்குள் முடியலாமென்று எதிர்பார்த்திருந்த காலத்திற்கு முன்னமே தானே 31 மணிகாலத்தில் முற்றும் முடிந்துவிட்டது. அவ்வேலை மிக்க விரைவில் முடிந்ததற்காக ரெயில்வேகம்பனியார், அவ்வேலைக்காரர்களுக்கு ஓட்தானியமாவிலுைலாகிய நீரை யினிப்பாக்கி (Sweetened Oatmeal water) ப்பானமாகக் கொடுத்தார்கள். அவர்கள் வேலைக்குப் போகுமுன் எவ்வித வெறியுள்ள மதுபானங்களுஞ் செய்யவில்லை, ஆதலால், அவ்வேலை விரைவாகவும் அதிகமாகவும் பொறுமையாகவும் முடிந்தது. இதனுல் மதுபானமில்லாமலே கடினமான வேலையும் நன்ருய் முடியக்கூடுமென்று தெரிகின்றது இரண்டாவது,

சூக்குமரந்திரங்களுக்குதவும் உயிர்வாயுவைக் குறைத்தலால் அதன் சக்தி குறைகின்றது.

உயிர்வாயு குறையு மாயின் உஷ்ணங்குறையும், சக்தி குறையும், வேலை யுங்குறையும்.

மதுசாரம், ஊக்கத்தைக்கெடுத்துச் சோம்பலைக் கொடுக்கும்.

பெருங்குடியர்கள் அடிக்கடி சோம்பலாகவும் வேலைசெய்வதற்கு விருப்பமில்லாமலு மிருப்பதை நாம் பார்க்கின்றோம். மது சாரம், நல்ல வேலை செய்பவனுடைய இரத்தத்தை நகர்ந்து செல்லும் பிராணியின் நிலைமைக்குக் கொண்டுவந்து, அவனை மந்தனாகவும் சோம்ப னாகவும் செய்கின்றது. குடிப்பழக்கம் அதிகப்படுமாயின் சோம்பலும் பழக்கமாய் விடுகிறது. சன நெருக்கமான அறையிலுள்ள அசுத்தமான காற்று செய்வது போலவே மதுசாரம் வேலை செய்து, தூக்கமயக்கத்தை யும், நினைத்தற்கு அசக்தத்தையுங் கொடுக்கிறது. வாலிபரைப் பார்க்கி னும் விருத்தாப்பியர் உயிர் வாயுவைக் குறைவாக உட் கொள்ளுகிறார்கள். ஆகலின், மதுசாரம், வாலிபர்களை விருத்தாப்பியர் நிலைமைக்குக் கொண்டு வந்து, அவர்களை மந்தராக்கி, நல்ல வேலை செய்வதற்கும் தகுதியற்றவர்க ளாக்குகின்றது.

தேகத்தில் நடைபெறும் சகனத்தோடு (Oxidation) ஏதேனும் சம் பந்தப் படுமாயின், அதனால் நமக்குள்ள சக்தியும் வேலைசெய்வதற்கு விருப் பமுங் குறைகின்றது. இச்செயலை மதுசாரம் உண்டாக்குவதால், அம் மதுசாரம் உழைப்பாளிக்குப் பெரும்பகையாகின்றது.

தேகந்தன்னைத்தானே சீர்படுத்திக் கொள்ளுஞ் சக்தியை மதுசாரங் கெடுக்கிறது.

ஒருவன் நோயாயிருந்தால் அவனைச் சௌக்கியப்படுத்தவும் அல்லது அவனுடைய உடம்பில் எங்கேனுங் காயமுண்டானால் அதனை ஆற்றுவது இரத்தத்தின் வேலையாம். ஆனால் இரத்தத்தில் மதுசாரஞ் சேர்ந்திருக்கு மாயின் இரத்தத்தின்வேலை தடைபடுகின்றது. அதனால், அந்நோயுங் காயமுஞ் சீக்கிரஞ் சொஸ்தமடைவதில்லை. இரணவைத்தியர்கள் (Surgeons) குடியர்களுக்குச் சஸ்திரப் பிரயோகஞ் (Surgical Operations) செய்வதால் குணப்படுகிறதில்லை யென்று அவர்களை வெறுத்து அநே கரை விலக்கிவிடுகிறார்கள். அவ்வாறு அவர்களை வெறுப்பது தங்களுக்கு இரணச்சிகிச்சை செய்யுஞ் சாமர்த்தியமில்லை யென்பதல்ல. ஆனால், அவர்

களுக்குக் குடிப்பழக்க மிருப்பதினுலேயே அவர்கள் அவர்களை வெறுக்கிருர்கள்.

ஒரு மனிதனுக்கு ஒரு காலில் படுகாய முண்டாயிற்று அவன் இரண வைத்தியரிடங் கொண்டு போகப்பட்டான். வயித்தியர் அவன் காலைச் சோதித்துப் பார்த்ததில், அவன் காலை வாங்கி விடும்படி யிருந்தது. இரணவைததியர் மிக்க அநுபவமுள்ளவரானதால், அவன் முகத்தைப் பார்த்ததும் அவன் குடியனென்று கண்டு கொண்டனர். காயம்பட்டவன் "ஐயா! சஸ்திரப் பிரயோகம் என்னைக் கொன்று விடுமோ? என்று கேட்டான். "ஐயோ! அது கொல்லாது; ஆனல், மதுசாரத்திற்கு உத்தரவு சொல்ல என்னுல் முடியாது" என்ருர். இரண வைத்தியர் தம்முடைய சாமர்த்தியத்தாலா;வேண்டிய வெல்லாம் செய்தாயிற்று. மதுசாரம் அவனைத்தனக்கு இரையாக்கிக்கொண்டது.

முன் யுத்தம் நடந்த காலத்தில் ஒரு சமாசாரப்பததிரிகையில் கீழ் வரும் விஷயம் எழுதியிருந்தது.

யுத்தத்தில் இரண்டு மனிதர்கள் ஒரே நாளில் ஒரே விதமாகக் காயமடைந்தனர். அவர்கள் கிளாஸ்கோவ் (Glassgow) நகரிலுள்ள இராணுவ வைத்திய சாலைக்குக் (Military Hospital) கொண்டுவரப்பட்டனர். ஒருவன் சாமர்த்தியமும் பருத்த தேக முடைய ஸ்காட்லண்டு தேசத்தான் (Scotchman) மற்றவன் சிறியவனுயிருந்தான். அவனை ஸ்காட்லண்டு தேசததான் "வீசாபி" என்றழைப்பது வழக்கம். இவன் காயம் சீக்கிரம் ஆறிப்போய்த்தேக சுகததோடு வயித்திய சாலையை விட்டுப்போய்விட்டான். ஸ்காட்லண்டு தேசத்தான் காயம் இன்னும் சொஸ்தமாகவில்லை. படுக்கையிலேயே கிடந்தான். தன் சிநேகிதன் மாத்திரம் என் தன்னினுஞ் சீக்கிரமாய் சொஸ்தமடைந்தானென்பதை அவனுல் தெரிந்து கொள்ளக் கூடவில்லை. அவன் ஒரு நாட்காலையில் வயித்தியரைப் பார்த்து "டாக்டர் அவர்களே" "வீசாபிமாத்திரம் எனக்கு முன் சொஸ்தமாகிப்போய்விட்டதெப்படி?" என்று கேட்டான். அதற்கு டாக்டர் "வீசாபி குடிப்பழக்கமே யில்லாதவன். நோயைக்குணப்படுத்தும் இரத்தத்தைக் கெடுப்பதற்கு அவனுடைய இரத்தத்தில் ஒன்றுமில்லை. உன்னுடைய இரத்தத்திலிருக்கின்றது" என்று பதில் சொன்னுர்.

குடிப்பழக்கமே யில்லாதவன் நோயினின்றுங் குணப்படுவதைப்பார்க்கினும், குடிப்பழக்கமுள்ளவன் நோயினின்றுங் குணப்படுவது தெய்வாதீனமேயாம்.

குடிப்பழக்கமில்லாதவர்களுக்கு நோய் அதிகமாக வருவதில்லை. அவர்களுக்கு நோய்வந்தாலும் குணமடைவதற்குச் சுலபமான நல்லவழிகளுண்டு. டாக்டர் கார்பெண்டர் (Carpenter) குடிப்பழக்கமில்லாதவர்களாலும் குடிப்பழக்கமுள்ளவர்களாலும் கொடுக்கப்பட்ட பணத்திற்குத் தனித்தனியாகக் கணக்கு வைத்ததாகவும், அதில், குடிப்பழக்கமில்லாதவன் கொடுத்த ஒரு பவுனுக்குக் குடியன் மூன்று பவுன் கொடுத்திருப்பதாகக்கணக்கிட்டிருக்கிறதாகச் சொல்லுகிறார். இதனாலே மதுபானத்தால் அடிக்கடி தேக சுகங்கெடுகிறதென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

18 வயதுள்ள இரண்டு வாலிபர்கள் சமமான தேகக்கட்டும், ஆரோக்கியமும், வலுவுமுடையவராயிருந்தனர். இவர்களில் ஒருவன் குடிப்பழக்கமில்லாதவன். மற்றவன் மிதமான குடியன், இவர்களில் குடிப்பழக்கமில்லாதவன் ஆயுட்காலம், குடிப்பழக்கமுள்ளவனைப்பார்க்கிலும் $7\frac{1}{2}$ யிலிருந்து 10 வருடத்திற்கு நீடிக்கிறதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

இவர் பிராந்தி, சாப்பிடுகிறார் இவர் ஒயின் சாப்பிடுகிறார் அவர், உஸ்கி சாப்பிடுகிறார், இவர் கள் குடிக்கிறார், அவர் பட்டை சாராயங் குடிக்கிறார், இன்னொருவர் கொளம்பு சாராயங் குடிக்கிறாரென்று சொல்வது இப்பெரியோர்களெல்லோரும் ஒரே வித விஷத்தையே குடிக்கிறார்களென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

(தொடரும்)

ரோட்டுகளின் வழியாகத் தபால் மோட்டார் வண்டிகள் ஓடுவதால் அநேக விபத்துகள் நேரிடுவதால் அவற்றைத் தடுப்பதற்காக லண்டனின் பூமிக்கடியில் ஓர் குழாய்க்குள் தபால் ஆபீஸ் ரயில் வண்டிகள் ஓடுகின்றன. உலகிலேயே இம்மாதிரி வண்டிகள் ஓடுவதில் இதுதான் முதலாவதாகும் இந்த ரயில்வே லைனின் நீளம் ஆறரை மைல், பாடிங்கன் தபாலாபீசிலிருந்து விசேபல் வரைக்கு மிருக்கின்றது. வண்டிகள் ஓடும் குழாயின் குறுக்களவு 9-அடி, தண்டவாளங்களின் அகலம் இரண்டடி, இவ்வண்டிகள் மின்சார சக்தியினால் ஓடுகின்றன. மூன்று வண்டிகள், இரண்டு மோட்டார்கள், இவ்வளவு தான் வண்டி, எவ்விடத்தில் இவ்வண்டி நிற்க வேண்டுமோ அங்கே ஓர் புத்தான் மூலமாக மின்சார சக்தியை நிறுத்தி விட்டால் போதுமானது.

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத்தலைவன்

(ஸ்ரீமான் மயிலை சீனி. வேங்கடசாமி எழுதியது)

11-வது அத்தியாயம்.

நட்டாஜி சிவாஜியைச் சந்தித்தல்

பொழுது விடியும் வேளையாயிற்று. கிழக்கு வெளுத்துக் காட்டிற்று. ஆகாயத்தில் வைரக்கற்கள் போல் மின்னும் நட்சத்திரங்கள் ஒளி மழுங்கி ஒவ்வொன்றாக மறைகின்றன. மரங்களில் பறவைகள் துயில் விட்டெழுந்து இனிமையாக வாய்விட்டுப் பாடுகின்றன. மாஞ்சோலை யில் மாமரத்தடியில் படுத்துறங்கும் மூவரில் நட்டாஜி முதலில் விழித்தெழுந்தான். அவன் கூட்டாளிகளான குடியானவர்கள் இன் னும் குறட்டை விட்டுத் தூங்குகின்றனர். நட்டாஜி, அவர்களைத் தட்டி எழுப்பினான். இருவரும் எழுந்தவுடன் நட்டாஜி "நடங்கள் போவோம்" என்றான்.

"நீர் எங்கே போகிறீர்? எங்களுக்காகப் பரிந்து வந்து ஆபத்தில் அகப்பட்டுக் கொள்ளப் பார்த்தீர். நல்ல வேளையாகத் தப்பினோம். சிப்பாய்கள் கையில் சிக்கி யிருந்தால் உங்கள் கதியும் எங்கள் கதியும் என் னாகும்?" என்று குடியானவர்கள் ஆச்சரியத்தோடு கேட்டார்கள்.

நட்டா:—ஆ! அகப்பட்டுக் கொண்டிருந்தால் நம் உயிர்போய் விடு வது திண்ணம். என்னை உளவறியும் ஒற்றன் என்று குற்றஞ்சாட்டி ஒரே வீச்சாக என் தலையை வெட்டியிருப்பார்கள். எனக்கு உதவியாக நின்ற உங்களையும் கொலை செய்திருப்பார்கள் என்பது திண்ணம். அதிருக்கட்டும். தேசீயக் கட்சியின் தலைவர் சிவாஜி எவ்விடத்தி லிருக் கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? நான் அவரைத் தேடிக் கொண் டுதான் போகிறேன்."

"சிவாஜியா! கடவுள் அவருக்கு வெற்றியளிப்பாராக! அவர் நீடூழி வாழ்க!" என்று வாழ்த்தினான் குடியானவர்களில் ஒருவன்.

மற்றவன், "ஐயா! அந்த புண்ணியவான் ஒரு இடமாக இருப்ப தில்லை. இன்றைக்கு இங்கிருப்பார்; நாளைக்குப் பூனாவிலிருப்பார்;

அடுத்த நாளைக்கு இராஜகாட் கோட்டையி லிருப்பார். இன்னொரு நாளைக்குக் கல்யாண் நகரத்தில் முகம்மதியருடன் சண்டை செய்து கொண்டிருப்பார். அவருக்கு ஒரு நிலையான இடமா? இப்பொழுது அவர் எங்கே யிருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால், லோககாட் கோட்டைக்குப் போனால், அவர் தற்போதிருக்கும் இடத்தை அங்கே தெரிந்து கொள்ளலாம்'' என்று விடையளித் தான்.

நட்டாஜி சற்று யோசித்தான். பிறகு, "லோககாட் கோட் டையா? அது இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கும்?'' என்றான்.

"சற்றேறக்குறைய பதினாறுமைல் இருக்கும்''

"சரி! அதுதான் நல்ல யோசனை. இப்பொழுது நேராக நான் லோககாட்டுக்குப் போகவேண்டும்.''

"அப்படியானால் நாங்கள் கண்டாலா கிராமம் வரையில் உம்மு டன் வருகிறோம்'' என்றார்கள் குடியானவர்கள்.

மூவரும் புறப்பட்டு நடந்தார்கள். இன்னும் பொழுது விடிய வில்லை. ஆனால், கொஞ்சங் கொஞ்சமாக இருள் மறைகிறது. மூவ ரும் வழி நடந்து கண்டாலா கிராமத்தை யடைந்தபோது பொழுது விடிந்து சூரியன் கிழக்கே புறப்பட்டான். குடியானவர்கள், கண் டாலா கிராமத்துக் கருகில் நட்டாஜியை விட்டுப் பிரிந்து தங்கள் கிரா மத்தை நோக்கி நடந்தார்கள். நட்டாஜி, கண்டாலா கிராமத்தில் சென்று முன்பு அயூப்கானுடைய "அபு ஜான்'' என்னும் குதிரையை ஒப்படைத்திருந்த குடியானவன் வீட்டை நாடிச் சென்றான். நட்டாஜி முகம்மதிய சிப்பாய்போல் உடுப்பணிந்து வருவதை தூரத்திலிருந்து பார்த்த குடியானவன் திடுக்கிட்டுப் பயந்தான். வருகிறவன் நட்டாஜி என்பதை யறியாமல், உண்மையிலேயே ஒரு முகம்மதிய வீரன்தான் தன் வீட்டைக் கொள்ளையடிக்க வருகிறான் என்று அவன் நினைத்து விட்டான். இனி தனக்கு என்ன ஆபத்து நேரிடப் போகிறதோ என்று யோசித்தவண்ண மிருந்தபோது, நட்டாஜி அருகில் வந்து, குடியான வன் பயப்படும் காரணத்தை யறிந்து கொண்டு "என்ன அப்பா! பயப் படாதே. நான் முகம்மதிய சிப்பாய் அல்லன். மகாராட்டிரன்; உன் சிநேகிதன்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

குடியானவன் அவன் முகத்தையுற்றுப் பார்த்து அவன் இன்னா னென்பதை யறிந்து கொண்டு உவகையுடன். "ஆ! நீயா! அன்று சந்தி

யாசி வேஷத்தோடு வந்தவரல்லவா? இன்றைக் கென்ன துலுக்கச் சிப்பாய் வேஷம்? என்னை பயப்படச் செய்ய வேண்டுமென்று இந்த வேஷத்தோடு வந்தீரா, என்ன?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

"இல்லை, இல்லை. அப்படி யொன்றுமில்லை. சந்தற்பம் இந்த வேஷத்தோடு வரச்செய்தது. உன்னை மிரட்டி பயப்படச் செய்ய வேண்டு மென்று எண்ணியிருந்தால் நேராக உன்னிடம் வந்து ஒரு துருக்க வீரனைப் போல பாவனை செய்து 'அடே இந்து பயலே! உன் பணத்தை யெங்கே ஒளித்துவைத்திருக்கிறாய்? உடனே எல்லா வற்றை யும் மூட்டைகட்டு' என்று அப்பொழுதே உன்னை மிரட்டி யிருப் பேனே'' என்று நட்டாஜி சிரித்துக் கொண்டே விடையளித்தான்.

குடியானவனும் நகைத்து "ஆம் ஆம். வாருங்கள் உள்ளே வந்து உட்காருங்கள்'' என்று வரவேற்று வீட்டிற்குள் அழைத்துச் சென்று உட்காரச் செய்தான். இருவரும் உட்கார்ந்த உடன் நட்டாஜி தன் கதையை குடியானவனுக்குச் சொன்னான். முந்திய நாள் இராஜமாட்சிக் கோட்டை முற்றுகை யிடப்பட்டதும், வெளிக்கோட்டையை முகம்மதி யர் பிடித்துக்கொண்டதும், தான் முகம்மதிய சிப்பாயின் வேஷத்தோடு சிவாஜியிடம் செல்ல வெளிவந்ததும், புல் சுமை தூக்கி வந்த குடியானவர் களுக்காகத் தான் பரிந்து பேசியதும், பிறகு சிப்பாய்கள் தன்னை இன்னா னென்றறிந்துகொண்டு தன்னையும் குடியானவர்களையும் துரத்தி வேட் டையாடியதும், பிறகு முகம்மதியர் கைக்குத் தப்பி மாந்தோப்பில் வந்து படுத்துறங்கியதும் ஆகிய எல்லாவற்றையும் குடியானவனுக்குச் சொன் னான்.

இவற்றையெல்லாம் ஆச்சரியத்தோடு கேட்ட குடியானவன், நேற்று காலை அதாவது இராஜமாட்சி கோட்டை முற்றுகை யிடப்பட்ட அன்று காலையில், தன் நண்பனான இராமன் காசிபாயையும் தாதாஜியையும் அழைத்துக்கொண்டு வந்ததாகவும் அவர்கள் மூவரும் அன்று பகலும் இராத்திரியும் தன் வீட்டில் தங்கியிருந்து இன்று காலையில்தான் லோகக காட் கோட்டைக்குப் பிரயாணப்பட்டுப் போனார்களென்றும் தெரிவித் தான்.

"ஆ! அவர்கள் லோககாட் கோட்டைக்கா போனார்கள். நானும் அங்கே தான் போகிறேன். அப்படியானால் அவர்களை அங்கே சந்திப் பேன்.'' என்று சந்தோஷமாகச்சொன்னான் நட்டாஜி. ஏனென்றால், காசிபாயை மறுபடியும் கண்டு பேச சமயம் கிடைக்கும் என்று அவன்

கிளைத்தான். பிறகு குடியானவனைப் பார்த்து "அபு ஜான் (அபூப்கானுடைய குதிரை) எப்படியிருக்கிறது?" என்று கேட்டான்.

குடியானவன் அதற்கு ஒரு குறைவுமில்லை. சுகமாகவே இருக்கின்றதுஎன்று சொல்லி விட்டுப் பிறகு "நல்லது, நீர் அதிகமாகக் களைப்படைந்தவர்போல் காண்கிறீர் எழுந்திரும் சற்று உணவுகொண்டு இளைப்பாறின பிறகு புறப்பட்டுப்போகலாம்" என்று சொல்லி, நட்டாஜியை காலைக்கடன்களை முடிததுக்கொள்ளச் செய்து உணவு பரிமாறினன். உண்டு முடிந்ததும் சற்று நேரம் இளைப்பாறிய பின்னர் நட்டாஜி, குடியானவனிடம் செலவுபெற்றுக்கொண்டு அபு ஜான் குதிரையின் மேல் அமர்ந்து லோகக்காட் கோட்டைக்குப் புறப்பட்டான்.

அபு ஜான், உயர்ந்த இனத்தைச் சேர்ந்த அரபிக்குதிரை, இடையில் இரண்டு நாள் ஓய்வு பெற்றிருந்தபடியால் அக்குதிரை இப்பொழுது சுறுசுறுப்பாகவே இருக்கிறது. நமது தேசீய வீரன் குதிரையைத்தட்டிவிட்டு கம்பீரமாகவே சவாரி செய்கிறான். கண்டாலா கிராமத்திலிருந்து லோககாட் கோட்டைக்குச் செல்லும் சாலை இருபுறமும் காடடர்ந்துள்ளது. இச்சாலையில் போக்குவரத்து அதிகமாகக்கிடையாது. இதுவரையில் ஒரு மனிதனவது நட்டாஜிக்கு எதிர்ப்படவில்லை.இவ்விதம் காடடர்ந்த பெரும்பாதை வழியே நட்டாஜி நெடுந்தூரம் சவாரி செய்தான். கடைசியாக, தூரத்தில் உள்ள ஒரு மலையின்மேல் கட்டப்பட்டுள்ள லோககாட் கோட்டை கம்பீரமாகத் தோன்றியது. டாலமி என்னும் புராதன கிரந்தகர்த்தரால் குறிப்பிடப்பட்டுள்ள இப்புராதன லோககாட் கோட்டையின் கம்பீரமான தோற்றமும் அதன் சிகரங்கள் ஆகாயத்தைத் தீண்டுவது போல் தோன்றும் காட்சியும் நட்டாஜியின் மனதைக் கவர்ந்தன. அவனுக்கு ஒருவித பெருமிதமும் மகிழ்ச்சியும் தோன்றின. ஏனென்றால் அம் மலைக் கோட்டை தேசீயக் கட்சியின் வெற்றிக்கு அறிகுறிபோல் விளங்குகிறது. உடனே நட்டாஜி தலை தாழ்த்தி "கடவுளே! உம் அருளால் தேசியக் கட்சி வெற்றி பெறவேண்டும். என்று சொல்லித் துதித்தான்.

இவ்விதம் நட்டாஜி யோசித்தவண்ணம் சவாரி செய்கிறான். சாலையில் ஒருமனிதராவது காணப்படவில்லை. சாலையில் இருபுறமும் செடிகளும் காடுகளுமாக விருக்கிறது.

இச்சமயத்தில் பாதைக்கருகிலுள்ள ஒரு புதரிலிருந்த ஒரு மனிதன் திடீரென்று பாய்ந்து வந்து நட்டாஜியின் குதிரைக் கடிவாளத்தைப்

பிடித்து இழுத்து நிருத்தி "ஐயா! வீரனே! எங்களுக்கு உதவி செய். உதவி செய்" என்று கூவினான்.

நட்டாஜி திடீரென்று தோன்றிய அம்மனிதனைத் தைரியமாகப் பார்த்து "நீ யார்? என்ன வேண்டும்? யாருக்கு ஆபத்து?" என்று கேட்டுக்கொண்டே, வந்த மனிதனுடைய முகத்தைக் கூர்ந்து பாத்தான். உடனே அவனுக்கு ஆச்சரியம் உண்டாய்விட்டது. ஏனென்றால் அப்படி வந்த மனிதன் நட்டாஜிக்கு அறிமுகமான இராமனே. அவன் இன்னா னென்றறிந்த வுடனே நட்டாஜி "ஆ! இராமா! நீயா என்ன! இது? காசி பாய் எங்கே? தாதாஜீ" என்று சொல்வதற்குள், இராமன் தான் முகம் மதிய சிப்பாய் என்று நினைத்திருக்கும் குதிரைவீரன் நட்டாஜி என்று அறிந்துகொண்டு, "ஓ! நீங்களா! அதுவும் முகம்மதிய உடுப்பில்! ஆனால் நல்லதாச்சு. கடவுளே உங்களை இங்கு அனுப்பினார் போலிருக் கிறது..............." என்று ஆச்சரியத்தோடு சொல்லியபோது நட்டாஜி அவசரத்தோடு இடமறிந்து "ஆபத்தென்றாயே, யாருக்கு, காசி பாயும் தாதாஜியும் எங்கே?" என்றான்.

"கொள்ளைக்காரர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டார்கள்."

இதைக்கேட்டதும் நட்டாஜிக்கு கோபமும் ஆத்திரமும் பொங் கிற்று. தாதாஜியைப்பற்றி அவன் அதிகமாகக் கவலைப்படவில்லை. தன் காதலி, காசிபாய் கொள்ளைக்காரர் கையில் அகப்பட்டுக்கொண்டது தான் அவனுக்கு ஆத்திரத்தையும் கோபத்தையும் உண்டாக்கிவிட்டது.

"அவர்கள் போன இடம் தெரியுமா?" "இதோ இந்தப்பக்கம் போனார்கள்" என்று இராமன் அந்தத்திசையாகக் கையைக் காட்டினான்.

"எவ்வளவு நேரமாயிற்று?"

"இரண்டு நாழிகைக்கு முன்"

"அந்தத்திருட்டுப்பயல்கள் மொத்தம் எத்தனைபேர் இருப்பார்கள்?"

"ஏறக்குறைய நூறுபேர்"

இதைக் கேட்டதும் நட்டாஜி மனங்கவன்றான். இரண்டு பேர் நூறு பேரை வெல்ல முடியுமா? இருந்தாலும் அவர்களை எவ்விதத்தி லாவது கள்வர் கையிலிருந்து மீட்டுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான். காசிபாய், தன் சகோதரி கங்காபாயைப்

போ என்று, பலாத்காரமாகக் கொண்டு போகப்பட்டதை நினைத்தபோது ஆ! அவன் மனம் என்னபாடு பட்டது!

"இராமா! வா. அவர்கள் போன வழியைக் காட்டு. நாம் அங்கே போய் அவர்களை விடுவிக்கவேண்டும்" என்றான் நட்டாஜி.

இராமன் முன்னால் நடந்தான். இருவரும் கொஞ்சதூரம் சாலை வழியாக நடந்தார்கள். அப்பொழுது சற்று தூரத்தில் சாலைக்கருகிலுள்ள ஒரு மரத்தடியில் இரண்டுமனிதர்கள் காணப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் சந்நியாசி, அவர் மரத்தடியில் உட்கார்ந்து மரத்தின் மேல் சாய்ந்து கொண்டிருக்கிறார். அவருக்குப் பக்கத்தில் நிற்பவர் கையில் ஒரு குதிரையைப் பிடித்திருக்கிறார். நடுத்தரமான உயரமும் கூர்மையான பார்வையும் கம்பீரமான தோற்றமும் அன்பு நிறைந்த மனமுடையவராகக்காணப்படுகிறார். அவருடைய மீசையும் தாடியும் அவர் ஒரு மகாராட்டிர கனவான் என்பதை விளக்கினான்.

இராமனும் நட்டாஜியும் அவர்களருகில் வந்ததும் நட்டாஜி அவர்களைப் பார்த்து "ஐயா! நீங்கள் யார்? நல்லமனிதர்கள் போல் காணப்படுகிறது திருடர்களும் கொள்ளைக்காரர்களும் அதிகாரஞ் செய்யும் இந்தக் காட்டில் தனியாக உட்கார்ந்து என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று வினவினான்.

நட்டாஜியின் கேள்விக்கு மரத்தடியில் சாய்ந்திருந்த சுவாமிகள் ஆச்சரியப் படும்படியான இந்த விடையை யளித்தார்.

"எங்களை மனிதர் என்று சொல்லுகிறீர்? அல்ல. நாங்கள் மனிதரல்ல, தேவர்கள்! என்னை மரோபா சுவாமி என்று கூப்பிடுகிறார்கள். இதோ நிற்கிறாரே இவர்தான் மகாராட்டிர தேசத்தின் தலைவர், சுயராஜ்யத்திற்காகப் போராடும் வீரர்; சிவனுடைய அவதார மென்று சொல்லப்படும் சிவாஜி! நல்லது. நாங்கள் இங்கே உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறோம். நட்டாஜி! மேதாரமலையில் வசித்த யோகானந்த சுவாமிகளின் மாணவனாகிய நட்டாஜி! உன்னைத்தான் நாங்கள் இங்கே எதிர்பார்த்திருக்கிறோம்"

இவ்விடையைக் கேட்டு நட்டாஜி ஆச்சரியத்தோடு திகைத்தான். முன்பின் அறியாதவர் தன்னைப் பெயரிட்டழைப்பதும் தனக்காகவே நடுவழியில் காத்திருப்பதும் அதிலும் சிவாஜியே தனக்காகக் காத்திருப்ப

தும் அவனுக்கு ஆச்சரியத்தை யுண்டாக்கித் திகைக்கச் செய்தன. இது உண்மைதானு அல்லது கனவு காண்கிறேனு? என்று அவன் யோசித்தான்.

நட்டாஜி ஆச்சரியப்படுவதைக் கண்ட சிவாஜி அவனைப் பார்த்து "நட்டாஜி, ஒன்றும் ஆச்சரியப்பட வேண்டாம். மரோபா சுவாமிகள் சொல்லியது யாவும் உண்மையே. நான் பவானி தேவியின் கட்டளைப் படி இந்தத் தேசிய வேலையை, சுயராஜ்யப் போரை மேற்கொண்டேன் அடிக்கடி பவானி தேவி என்கனவில் தோன்றி காட்சி கொடுத்துக் கட்டளை யிடுவதுண்டு. அக்கட்டளைப்படியே நான் நடந்து வருகிறேன். நேற்று இரவும் பவானிதேவி என்கனவில் காட்சி கொடுத்து, கண்டாலா கிராமத்திலிருந்து நட்டாஜி என்னும் வீரன் வருவானென்றும் அவனை அழைத்துக் கொண்டு நான் தோர்ணு கோட்டைக்குப் போக வேண்டும் என்று அங்கே போன பிறகு ஒரு பெரிய நன்மை உண்டாகும் என்றும் கட்டளையிட்டு மறைந்தார். அந்த உலகமாதாவின் உத்தரவுப்படியே நாங்கள் இங்கே உனக்காகக் காத்திருக்கிறோம். நாங்கள் சொல்வதை நீ நம்பினுலும் சரி நம்பாவிட்டாலும் சரி. நட்டாஜி! நான் மேற்கொண்டிருக்கும் சுயராஜ்யப் போரில் உன் உதவி எனக்கு அவசியம் வேண்டியிருக்கிறது." என்று சொல்வதற்குள் நட்டாஜி,

"மகாராட்டிர தேசத்தின் சுதந்திரத்திற்காக, மகாராட்டிரர்களின் சுயமரியாதைக்காக, தாய் நாட்டின் சுய ஆட்சிக்காக ஓ! தலைவரே, இதோ என் உயிரைக் கொடுக்கத் தயாரா யிருக்கிறேன். கட்டளை யிடுவது உம்முடைய வேலை, அதைச் செய்து முடிப்பது என்னுடைய கடமை" என்று சொல்லி சிவாஜியின் காலில் வீழ்ந்து வணங்கினுன் நமது தேசிய வீரன்.

அவன் அவ்விதம் செய்வதற்குள் சிவாஜி விரைந்து தூக்கித் தழுவி "நட்டாஜி என்ன காரியம் செய்தாய்! நாம் தோழர்கள். தேசிய ஊழியத்தில் தலைவன் என்பதும் ஊழியன் என்பதும் கிடையாது. தலைவன் பட்டமும் மரியாதையும் உண்மைத் தேசாபிமானிகள் எதிர்பார்க்க மாட்டார்கள். நமக்கு வேண்டிய தெல்லாம், நம்முடைய நோக்க மெல்லாம் சுயராஜ்யம் ஒன்றே! அதைவிடுத்து அளவுக்கு மிஞ்சிய மரியாதை செய்வதை நான் ஒரு பொழுதும் சகிக்கமாட்டேன்" என்று வருத்தத்தோடு சொன்னுர்.

"ஏன் இங்கு காலத்தைப் போக்க வேண்டும் புறப்பட்டுப் போக லாமே" என்றார் சுவாமிகள்.

நட்டாஜி "நான் வந்தகாரியத்தைச் சொல்ல மறந்து விட்டேன். நான் உங்களைத்தான் தேடி வருகிறேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல உங்களை இங்கே சந்தித்தேன்" என்று சொல்லி இராஜமாட்சிக் கோட்டை முகம்மதியர்கையில் சிக்கிக்கொண்டதையும் உள்கோட்டையில் மகாராட்டிரர்கள் அடைக்கலம் புகுந்திருப்பதையும் உதவிக்குச் சேனை வந்தால் முகம்மதியர்களைத் துரத்தியடித்து விடலா மென்றும் தெரிவித்தான். பிறகு காசிபாயுடன் தாதாஜி கொள்ளைக் கூட்டத்தாரால் சிறை பிடிக்கப்பட்டிருப்பதையும் தெரிவித்து உடனே அவர்களை விடுவிக்க முயற்சி செய்ய வேண்டு மென்று சொன்னான்.

இவ்விரண்டு செய்தியும் சிவாஜிக்கு மிகுந்த விசனத்தை யுண்டாக் கின. இராஜமாட்சிக் கோட்டை பீஜப்பூருக்கும் கல்யாணி நகரத்திற்கும் இடையில் உள்ள பலமான மலைக்கோட்டை, இக்கோட்டை பீஜப்பூருக் கும் கல்யாணி நகரத்திற்கு முள்ள போக்குவரவைத் தடைசெய்ய வசதி யானது. இத்தகைய முக்கியமான கோட்டை ஆபத்தான நிலைமையி லிருப்பதைக் கேட்டு சிவாஜி வருத்தமடைந்தார்.

இரண்டாவதாக தாதாஜி, சிவாஜிக்கு நெருங்கிய நண்பர். செல்வ மும் செல்வாக்கும் உள்ளவர். தேசிய வேலைக்காக, வேண்டும் போதெல் லாம் தாராளமாகப் பணவுதவி செய்யும் பிரபு. இப்படிப்பட்ட நண்பர் கொள்ளைக்காரால் சிறைபட்டிருப்பதைக் கேட்டபோது அவருக்கு மனம் துடித்தது.

அவர் தனக்குத்தானே வாய்விட்டுச் சொல்லிக் கொண்டார். "ஆ! நான் என்ன செய்யட்டும்! இருந்த சேனைகளை யெல்லாம் கல்யாண் நக ரத்தை முற்றுகை யிடும்பொருட்டு அனுப்பிவிட்டேன். இராஜமாட்சிக் கோட்டைக்குச் சேனைகளை நான் எப்படி அனுப்புவது? புதியசேனைக ளைச் சேர்ப்பதற்கென்றால், கணக்கற்ற பேர் சேனையில் சேர்ந்து கொள் ளத் தயாராக ஆவலாக விருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு வேண்டிய ஆயுதங்களும் உடுப்பும் உணவும் சேகரித்துக் கொடுக்க என்னிடம் இப் போது பணம் எது? ஓ லக்ஷ்மீ! நீ சற்று அருள் செய்வாயானால், கொஞ் சம் செல்வத்தை எனக்களிப்பாயானால் இதோ! இப்பொழுதே மகாராட்

டா தேசம் அன்னிய ஆட்சியை யுதறித்தள்ளி விட்டு சுயராஜ்யத்தோடு சந்தோஷமாக விருக்கும்!" "ஆ! நான் ஏன் இப்படி வருத்தப்பட வேண்டும். தோர்ணு கோட்டைக்குப் போகும்படி பவானிதேவியின் கட்டளை யிருக்கிறதே. உடனே நான் அங்கே போகவேண்டும். ஆனல், அங்கு போவதற்கு முன் நம் லோககாட் கோட்டைக்கு எதிரிலேயே தலை தூக்கித் திரிகிற இந்தக் கள்ளப் பயல்களை அடியோடு ஒழிக்க வேண்டும். நமது கோட்டைக்கு அருகில் கள்ளப்பயல்கள் கொஞ்சமும் அச்சமின்றி நடமாடுவதும் ஜனங்களைக் கொள்ளையடிப்பதும் இனி நம்மால் பொறுக்க முடியாது" என்று சொல்லிக் கொண்டே நட்டாஜியைப் பார்த்து "தாதாஜியைப் பிடித்துக் கொண்டு போனவர்கள், வெங்கட்டவாகு என்னும் கள்ளப்பயலின் கூட்டத்தார். அவன் அநாதையான மனிதர்களைத் தன்னுடன் சேர்த்து வைத்துக் கொண்டு வழிப்போக்கர்களைக் கொள்ளையடித்து வருகிறுன். பௌத்த சந்நியாசிகள் வசித்திருந்த பாஜாமலைக் குகைகளில் நிரந்தரமாக வசித்துக் கொண்டிருக்கிறுன். நாம் இப்பொழுது நமது கோட்டைக்குச் சென்று, நமது மனிதர்களை அழைத்துக் கொண்டு வந்து இப்பயல்களை விரட்டியடிக்க வேண்டும் இனி சற்றும் தாமதிக்கலாகாது. வாருங்கள் புறப்படுவோம்" என்று சொல்லி புறப்பட்டார். நட்டாஜியும் இராமனும் சிவாஜியைப் பின் தொடர்ந்தார்கள். மரோபா சுவாமிகள் எழுந்து அவர்களைப் பார்த்து "நான் பாஜா குகைக்குப் போய் வெங்கட்டவாகு கூட்டத்தாரின் நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் போய் ஆட்களை அழைத்துக் கொண்டு வாருங்கள்" இன்னெருபக்கமாக நடந்தார்.

(தொடரும்)

பம்பாயில் தனது வாலிப மனைவி அடிக்கடி பெற்றோர் வீட்டிற்கு போய்க் கொண்டிருப்பதை விரும்பாத ஒரு கணவன் ஒருநாள் அவளைப் பெற்றோர் வீட்டிலிருந்து அழைத்துவந்து நையப் புடைத்து ஒரு கயிற்றில் தூக்கி உத்திரத்தில் தொங்க விட்டான். அவள் அழுகிற சத்தம் கேட்ட அவள் உடன் பிறந்தாள் வந்து காப்பாற்றினுள். இதைப் பற்றி வழக்கு எற்பட்டதில் எல்லாம் கட்டுக் கதை என்று புருஷன் சொல்லி விடுதலை யடைந்து விட்டான். ஆனல் ஐக்கோர்ட்டுக்கு அப்பீல் வந்ததில் ஒரு வருஷம் சிறைவாசம் கிடைத்தது.

காலக்குறிப்பு

(மயிலை ஸ்ரீமான் சீனி. வேங்கடசாமி எழுதியது)

தமிழ்ப் புலவர் காலத்தையும், தமிழ் நூல்களும், தமிழ் சம்பந்தமான நூல்களும் இயற்றப்பட்ட காலத்தையும் ஆராய்ந்து எனக்குக் கிடைத்த வரையில் "இலக்ஷ்மி" மலர் 5 இதழ் 2ல் எழுதியிருப்பது வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும். இப்போது, இன்னும் சில குறிப்புகளை எழுதுகிறேன். பிழை இருப்பின் வெளிப்படுத்துவது பெரியோர் கடமை.

சகஹு.	கி. பி.	
1430	1508	சிதம்பரப்பாட்டியல், மதுரையுலா என்னும் நூற்களை இயற்றிய பரஞ்சோதிமுனிவர் சிதம்பர புராணத்தை இந்த வருடத்தில் இயற்றினார். (இவர், திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவரல்லர்.)
1516	1594	சிதம்பரம் இரேவண சித்தர் அகராதிநிகண்டை இவ்வாண்டில் இயற்றினார். இவர் சிவஞானதீபம், திருமேற்றளி புராணம், திருவலஞ்சுழி புராணம், திருப்பட்டீச்சுரப்புராணம் ஆகிய இந்நூற்களையும் இயற்றியுள்ளார்.
1574	1652	துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் புரபுலிங்கலீலை என்னும் நூலை இவ்வாண்டில் இயற்றினார்.
1609	1687	பிரபல ஆத்மநாத தேசிகர் சோழமண்டல சதகத்தை இயற்றினார். இந்நூல், சித்தாய் முத்தூர் அருணசலேந்திரன் என்பவர் வேண்டுகோளின்படி இயற்றப்பட்டு வையூர் பொன்வைத்தவர் சந்நிதியில் அரங்கேற்றப்பட்டது.
1629	1707	வீரமாமுனிவர் என்றும் தைரியநாதர் என்றும் பெயருள்ள Constantine Beschi என்பவர் ஈத்தலி நாட்டிலிருந்து (Italy) இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்.
1638	1716	B. Ziegenbalg என்பவர் தமிழ் இலக்கணத்தை இலத்தீன் பாஷையில் எழுதி Grammatica Damulica என்னும் பெயருடன் ஐரோப்பாவிலுள்ள Halle என்

சக ஹூ கி. பி

னும் பட்டினத்தில் பிரசுரம் செய்தார். இதன் பிரதி யொன்று பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையில் இருக்கி றதாகத்தெரிகிறது.

1648 1726 வீரமாமுனிவர் (Beschi) எழுதிய Grmamutica Latina—Tamubica என்னும் இலத்தீன் தமிழ் இலக்கணம் Tranquebar என்னும் ஊரில் அச்சிடப்பட்டது.

1715 1793 பரதேசியின் மோட்சப் பிரயாணம் என்னும் ஆங்கில நூலை (Buniyan's Pilgrim's progress) தமிழில் இயற்றி S, P. C. K. அச்சுக்கூடத்தார் முதன் முதல் அச்சிட்டார்கள்.

1709 1787 (பிலவங்க) புலியூர் வெண்பா இயற்றிய தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை யவர்கள் காலமானார்.

1832 இலக்கணநூற் சுருக்கம் என்னும் ஒரு சிறு தமிழ் இலக்கணத்தை இரேனியுசையர் Rev. Charles Theophilus Evald Rhenius) ஒன்னும் பாதிரி · இயற்றிவெளியிட்டார்.

1834 திருத்தணிகை விசாகப் பெருமாளையர் நன்னூலுக்குக் காண்டிகையுரை எழுதிவெளியிட்டார்.

1836 இரேனியுசையர் என்னும் பாதிரியார், A grammar of the Tamil Language என்றும் தமிழிலக்கணத்தை யெழுதி வெளியிட் டார்.

1846 (பிரபல) மழவை மகாலிங்கையர் பெரிய புராணம் முதல் பாகத்துக்கு உரை எழுதி வெளியிட்டார்.

1848 (பிலவங்க) ஷை ஐயர் பெரியபுராணம் இரண்டாம் பாகத்திற்கு உரை யெழுதி வெளியிட்டார். இதில், காரைக்கால் அம்மையார் சரித்திரத்தில் 17 பாட்டிற்கு மாத்திரம் களத்தூர் வேதகிரி முதலியார் உரை யெழுதியுள்ளார்.

1855 Rev. R. Bower, D. D. அவர்கள் நன்னூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக்கொடுக்க, அதனை Rev. Dr.

Grawl என்னும் ஜர்மானியப்பாதிரி Leipzig என்னும் பட்டினத்தில் அச்சிட்டு வெளியிட்டார். (Rev. Grawl 1853-ல் சென்னையில் இருந்திருக்கிறார்.

1858 தொல்காப்பிய நன்னூல் என்னும் தமிழிலக்கண புத்தகத்தை ஆங்கிலத்திலெழுதி வெளியிடப்பட்டது.

1878 Introduction to Nannool என்னும் (நன்னூல் மாயிரத்தின் ஆங்கிலமொழி பெயர்ப்பு) நூலை The Rev. H. Bower, D. D, அவர்கள் எழுதி வெளியிட்டார்.

1862 அமெரிக்கன் மிஷனைச் சேர்ந்த (Rev, Miron Winslow D. D.) அவர்கள், வின்ஸ்லோ தமிழ்—இங்கிலீஷ் அகராதியை வெளியிட்டார்.

1889 முத்துவீரிய உபாத்தியாயரியற்றிய "முத்துவீரியம்" என்னும் தமிழ் இலக்கண நூல் முதன் முதல் அச்சிடப்பட்டது. இதற்கு உரை யெழுதியவர் திருநெல்வேலி பாற்கடநாதன் கவிராயர்.

1893 தமிழ் இலக்கணத்தெளிவு என்னும் நூல் தாவீது யோசப் உபாத்தியாயரால் இயற்றி வேளியிடப்பட்டது.

சமீபத்தில் மைசூர் பார்க்கில் நடந்த கூட்டத்திற்கு 2000 ஸ்திரீகள் வந்து ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸின் வேண்டுகோள்படி சுதேசிப் பிரதிக்ஞை யெடுத்துக் கொண்டு பிரிட்டிஷ் துணி பகிஷ்காரத்தை வெற்றிகரமாக நடத்திவைப்பதில் புருஷர்களுக்குதவியாக வேலை செய்வதாகக் கூறினார்கள். ஸ்ரீமதி ஊர்மிளாதேவி தலைமை வகித்தார். ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோசும் பல ஸ்திரீகளும் பேசினார்கள். கவர்ன்மெண்டார் தேசத்தின் க்ஷேமத்தைச் சிறிதும் பொருட்படுத்த வில்லை யென்றும் உள்நாட்டுக் கைத்தொழில்கள் க்ஷீணித்துப் போனதால் வேலையில்லாக் கஷ்டமே அதிகரித்திருப்பதாயும் ஸ்வராஜ்யம் பெறுவதுதான் இதற்கு நிவர்த்தி யென்றும் ஆயுதமற்ற தேசத்திற்கு பிரிட்டிஷ் சாமான் பகிஷ்கரத்தைவிடச் சிறந்த ராஜீயக் கருவி இல்லை யென்றும் ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸ் கூறினார்.

கணித விநோதம்

5. என்னிடம் 5 ஜிலேபிகளும் என் தம்பியிடம் 3 ஜிலேபிகளும் இருந்தன. நாங்கள் அது சமையம் அங்கு வந்த புதிய மனிதர் ஒருவரோடும் சேர்ந்து அவைகளை உண்ட பின்பு அந்த வேற்று மனிதர் தாம் சாப்பிட்ட அளவுக்கு எட்டு அணு என்னிடம் அளித்துப்போய் விட்டார். என் தம்பி தன் 3 ஜிலேபிகளுக்கு மூன்றணு தந்து விட்டு மீதி 5 அணுவையும் என்னை எடுத்துக்கொள்ளச் சொல்லுகிறார். இது சரிதானு ?

6. கீழே காணும் பெருக்கல் கணக்கில் கோடிட்ட இடங்களில் சரியான எண்களைப் பூர்த்தி செய்க.

```
      4— —
        3—
  ——————————
     36 — —
 — — 7 —
 ———————————
 — — 3 — —
 ———————————
```

7. நான் ஒரு சாமானை ரூ. 100க்கு வாங்கி 20% லாபம் வைத்து விற்றேன். மறுபடி அதையே நான் விற்ற விலைக்கு வாங்கித் திரும்பவும் விற்க நேரிட்டதில் இத்தடவை 20% நஷ்டம் வந்தது. மொத்தத்தில் நான் அடைந்தது லாபமா ? நஷ்டமா ? எவ்வளவு ?

8. ஜமீன்தார் ஒருவர் வீட்டுக்கு 500 சேர் பால் கொண்டு சென்ற இடைச்சி ஒருவள் அம்மாளிகையினுள்ளே சேரு முன் ஐந்து வாயில்களைக் கடந்து செல்ல நேரிட்டது. முதல் வாயிலைக் கிட்டியதும் அங்குள்ள காவலாளிகள் 100 சேர் பாலை எடுத்துக்கொண்டு அதற்குப் பதில் அப்பாத்ரத்தில் தண்ணீரை நிரப்பி அனுப்பினுர்கள். இவ்விதமே மற்றைய வாயில்களிலும் நடந்ததென்றால் ஜமீன்தாருக்கு உண்மையில் கிடைத்த பால் எவ்வளவு ?

9. ஒன்று முதல் குறித்த அளவு எத்தனை சேர் நிறையுள்ள சாமான்கள் வேண்டுமானாலும் நிறுத்துக் கொடுகக குறைந்த எண்ணிக்கையில்

எத்துணை நிறைக்கற்கள் இருந்தால் போதுமானது. [உ-ம் 121 சேர் வரை] அவற்றின் நிறை எவ்வெவ்வளவு?

10. ஒரு வக்கீல் தினம் ரூ. 1 வீதம் தன்னிடம் வேலைக்கமர்ந்திருந்த தன்னுடைய குமாஸ்தாவை நோக்கி சென்ற ஆகஸ்டுமீ இவ்வாறு சொன்னார்:—" இம்மாதத்தில் நீர் என்று வேலையைவிட்டு நீங்குவதானாலும் உமக்குரிய சம்பளத்தொகையை எனது கையினில் ஐந்து விரல்களிலும் அணிந்துள்ள மோதிரங்களை அளிப்பதாலேயே தீர்த்துவிட முடியும்" என்பதே இவ்வாறானால் மோதிரங்களின் தனித்தனி மதிப்பு எவ்வளவு?

11. மூன்று பேர் தங்களிடம் சிறிதளவு தனித்தனியே ரூபாய்கள் வைத்திருந்தார்கள். அவர்களுள் முதலாமவன் மற்றைய இருவரும் தனித்தனி எவ்வளவு வைத்திருந்தனரோ அவ்வளவு அவர்கள் இருவருக்கும் கொடுத்து உதவி புரிந்தும், இரண்டாமவனும், மூன்றாவது மனிதனும் வரிசையாய்த் தம்முள்ளே இவ்விதம் ஒரு ஏற்பாட்டைச் செய்துகொண்டார்களெனில் கடையிசில் அவர்கள் ஒவ்வொருவரிடமும் ரூ. 8 ஒரேபடியாய் இருக்கக்காணலாகும். அப்படியானால் ஒவ்வொருவரும் முதலில் தம்மிடம் வைத்திருந்தது எவ்வளவு?

12. இறுதிக்காலம் சமீபித்ததை உணர்ந்துகொண்ட ஒருபிரபு பின் வருமாறு மரணசாஸனம் ஒன்று எழுதி வைத்தார். அது தருணம் கர்ப்பிணியாயுள்ள தன் மனைவி ஆண்மகவைப் பெறுவாளானால் அக்குழந்தை தமது சொத்தில் $\frac{2}{3}$-ம், மனைவி மீதியையும் அடைய வேண்டியது; அப்படியின்றி பெண்குழந்தை பிறக்குமானால் மனைவி $\frac{2}{3}$ பாகமும் அக்குழந்தை பாக்கியையும் எடுத்துக்கொள்ளவேண்டியது. இவ்வாறு அவர் எழுதி வைதது விட்டு இறந்துபோன சிறிது காலத்திற்கெல்லாம் அவருடைய மாங்கல்ய மிழந்த மனைவி ஆணொன்று பெண்ணொன்றாக இரண்டு மகவைப் பெற்றனள். இப்பொழுது அவர்கள் தம்முள்ளே சொத்தைப்பாகம் செய்துகொள்ளுதல் எப்படி?.......................... [தொடரும்]

*இதுபோல்வன கணக்குகள் புத்தி சாதுர்யத்தினால் முடிக்கக்கூடியவை. எனவே சந்தா நேயர்களில் இளைஞர் யாரேனும் "லக்ஷ்மி" மூலமே உடனே விடையிறுக்கக் கோருகிறேன். வழிகள் தெளிவாயும் சுலபமாயும் இருககவேண்டும்.

கணித வினோதம் முன்தொடர்ச்சி.

13. ஒரு கன்னிமடம். அதன் நடுவில் கண் தெரியாத அம்மடத்தின் தலைவிக்கெனத் தனித்த ஒரு அறையும் அதைச்சுற்றிலும் அவள் பாதுகாப்பிலிருந்த கன்னிகைகளுக்கான 8 அறைகளும் வரிசைக்கு மூன்றாய் நான்கு புறத்தும் அமைந்திருந்தன. இரவு நேரத்தில் எவரும் வெளியேறாமலிருக்கும்பொருட்டு அம்மடத்துத்தலைவர் அடிக்கடி சோதனை செய்வது வழக்கம். ஒரு நாள் இரவு அவள் வழக்கப்படி சென்று பார்க்க அறைக்கு மூவராய் வரிசைக்கு ஒன்பது பெயர் சரியாயிருப்பது அறிந்து திரும்பி விட்டாள். ஆனால், நடு இரவில் அவள் மறுபடியும் வந்து எண்ணிப்பார்த்தபோது ஏற்கனவே நான்கு கன்னியர்கள் வெளியேறியிருந்தும் வரிசைககு ஒன்பது பெயராகவே இருக்கக்கண்டு, திரும்பினாள். அவள் சென்றதும் வெளியே போயிருந்த நால்வரும் தனிததனியே ஒரு விடபுருடரோடும் திரும்பித் தம் அறை வந்துவிட்டனர். மீண்டும் வந்த மடத்து மூதாட்டி முன்போலவே வரிசைக்கணக்கு இருப்பது அறிந்து சென்று விட்டார். மேலும், நான்கு புருடர்கள் மடத்திற்குள் வந்தபோதும் இவ விதமெ எமாற்றினாள். பின்னும் நால்வர் உள்ளே வந்த பின்பும், கடைசியில் எல்லா விடபுருடர்களும் கன்னிகைகளோடும் வெளியேறிய பின்னும் வரிசைக்கு ஒன்பது பேராகவே இருக்க அவள் உணர்ந்தாளெனில் இவையெல்லாம் எங்ஙனம் பொருந்தும் ?

14. ஒரு குடியானவன் 50 தட்டிகளாலான தன் பட்டியில் 100 ஆடுகளே இருக்க முடியுமென்பதை உணர்ந்தும் மேலும் இரண்டு தட்டிகளின் உதவியைக்கொண்டே 200 ஆடுகள் இருப்பதற்கான இடத்தை அமைக்க முடியுமெனக் கண்டானானால் இஃது எங்ஙனம் இயலும் ?

15. ஒரு கனவான் ஒரு சில ரூபாய்களோடும், அரை ரூபாய் நாணயங்களோடும் சாமான்கள் வாங்கும் பொருட்டுக் கடைத் தெரு சென்றான். முதல் கடையில் தான் கொண்டு சென்ற ரூபாய்களில் பாதியும், ஒரு அரை ரூபாயும் செவவழித்தான். இரண்டாவது கடையில் மீதியிருந்த ரூபாய்களில் பாதியும் ஒரு அரை ரூபாயும் செலவு செய்தான் மூன்றாவது கடையினும் இங்ஙனமே செய்தான். கடைசியில், சில்லரமாற்றவேண்டிய நிர்ப்பந்தமின்றியே தன்னிடமிருந்த பணம் பூராவும் செலவழிந்திருப்பது உணர்ந்தான். இதனை விளங்க உரைக்க.

16. இரு வியாபாரிகள் ஒவ்வொருவரும் 50 தவிட்டு மூட்டைகள் வீதம் தமது இரண்டு மாடுகளின் பேரிலும் ஏற்றிக்கொண்டு 50 சுங்கச்சாவடிகளைக் கடந்து செல்ல நேரிட்டது. ஒவ்வொரு சுங்கச்சாவடியிலும் பாரமேற்றிய கால் நடை ஒன்றுக்கு ஒரு மூட்டை வீதம் கட்டணம் வாங்கிவிட்டனர். என்றால், அவர்கள் எவ்வளவு மூட்டையோடும் தம் இருப்பிடம் சேர்வார்கள்.

17. அவ்வளவாய்க் கல்வியறிவில்லாத ஒரு தகப்பன் இறுதிக்காலம் சமீபித்தது உணர்ந்து தன்னிடமிருந்த ரூ. 770-ஐயும் தன் நான்கு பிள்ளைகளும் முறையே $\frac{1}{2}$, $\frac{1}{3}$, $\frac{1}{4}$, 1/5 வீதம் பிரித்து எடுத்துக்கொள்ளுமாறு கட்டளை யிட்டான். இஃது அவர்களால் எங்ஙனம் இயலும் ?

18. ஒரு சிறு கப்பலில் 15 இந்தியர்களும் 15 கிருஸ்தவர்களும் இருந்தனர். சற்று நேரத்திற்கெல்லாம் கொடும் புயல் காற்றடிக்க கப்பல் மூழ்கும் போலிருந்ததை அறிந்த கப்பல் தலைவன் கப்பலிலிருந்த சாமான்கள் யாவற்றையும் கடலில் வீசி எறிந்து விட்டான். அதுவும் போதாமைகண்டு கப்பலிலிருந்தவர்களில் 15 பெயர்களையும் கடலில் தள்ளிவிடத் தீர்மானித்தான். இதற்காக அனைவரையும் வரிசையாய் நிறுத்திவைத்து முதலிலிருந்து 9வது நிற்பவனை வெளியேற்றிவிட்டான். இங்ஙனமே பல முறையும் செய்து 15 பேர் இந்தியர்களையும் மாளச் செய்து கிருஸ்துவர்கள் எல்லோரையும் தப்புவித்து விட்டான். இதற்கு அவன் அவர்களை எவ்வாறு நிறுத்திவைத்திருக்கவேண்டும் ?

19. 13 மங்கையர்களை வட்டமாய் இருக்கச் செய்து, எண்ணத் தொடங்கிய மங்கைக்கு 9-வது நிற்குமவளுக்கு ஒரு பூச்செண்டு வீதம் கொடுத்து அவளை அனுப்பிவிட்டு மீண்டும் மீண்டும் இங்ஙனமே செய்து என்னிடமிருந்த 12 செண்டுகளையும் அளித்து விட்டேன். எவ்வளவாவது மங்கையிலிருந்து எண்ணிக்கை தொடங்கினால் நான் விரும்பும் மங்கைக்கு பூங்கொத்து இல்லாமற் செய்யமுடியும் ?

20. நான்கு நம்பர்கள் உள்ளன. அவற்றின் மொத்தம் 45 முதலாவதோடு 2 கூட்டினாலும், இரண்டாவதிலிருந்து 2 கழித்தாலும், மூன்றாவதை 2-ஆல் வகுத்தாலும் வரும் விடைகள் யாவும் சமமாகவே யிருக்கும். என்றால், அந்நம்பர்கள் யாவை ?

கணித விநோதம்

21. ஒரு தனவான் தன் உயிலில் பின் வருமாறு கண்டிருந்தான் :—முதல் பிள்ளைக்கு ரொக்கமாய் ரூ. 1000-மும் மீதியுள்ள சொத்தில் 1/7 பாகமும், இரண்டாவது பிள்ளைக்கு மீதியுள்ளதில் 1/7 பாகமும், ரூ. 2000-மும் மீந்ததில் மூன்றாவது பிள்ளைக்கு மீதியில் ரூ. 3000-மும் மீதியுள்ளதில் 1/7 பாகமும், இங்ஙனமே பிள்ளைகள் எல்லோருக்கும் அச்சொத்து பூராவும் பிரிவினையாகவேண்டுமாயும் எழுதியிருந்தான். சொத்து முழுதும் பாகஞ்செய்த பிற்பாடு ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரே விதமான சமதொகையுள்ள பாகமே கிடைத்தது. என்றால் சொத்தின் மொத்த மதிப்பு எவ்வளவு ? எத்தனை பிள்ளைகள் இருந்தனர் ?

22. 21 கிண்ணங்களில் 7 நிறையும், 7 பாதியும், 7 காலியாகவும் பாலுள்ளது. அவற்றை 3 பேருக்கு ஒரே தொகையுள்ள கிண்ணங்களும் சம அளவுள்ள பாலும் கிடைக்குமாறு எவ்விதம் பங்கிட்டுக் கொடுப்பது ?

ஸ்ரீரங்கம், T. R. ஸ்ரீனிவாஸன்.

சமீபத்தில் பம்பாய்ப் பகுதியில் ஆயிரம் பஞ்சமர்களுக்குப் பூணூல் போடுவித்து அவர்களைப் பிராமணர்களாக்கி விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. பஞ்சமர்களை உயர்த்த வேண்டுமென்று இவ்வாறு செய்த சங்கத்தாரின் நோக்கத்தை நாம் போற்றுகிறோம். ஆயினும் அவர்கள் முறையை உலகம் போற்றாது. பூணூலில் ஏதோ உயர்வு உள்ளது போலவும் பூணூல் அணிந்ததாலேயே ஒருவர் பிராமணராய் விடுவாரென்றும் கருதுவது அறியாமையாகும். பஞ்சமர்களையும் அவர்கள் போன்ற தாழ்ந்த வகுப்பார்களையும் உண்மையில் உயர்த்த விரும்பும் தலைவர்கள் அந்தவகுப்பார்கள் இப்பொழுது தாழ்ந்திருப்பதற்குக் காரணங்களான புலாலுண்ணல், முக்கியமாக மாட்டு மாமிசம் புசித்தல், குடி முதலிய தீமைகளை ஒழித்து, நாள் தோறும் நீராடல், சுத்த சைவ வாழ்க்கையையும் உயர்ந்த ஆசாரங்களையும் மேற் கொள்ளல் ஆகியவற்றை கைக்கொள்ளுமாறு செய்ய வேண்டும். சுத்தமான உயர்ந்த ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு வாழ்வோர் இன்று தாழ்ந்த ஜாதியாராயிருப்பினும், நாளடைவில் அவர்கள் உயர்ந்த ஜாதியர்களாக ஏற்றுக் கொள்ளப் படுவார்களென்பது திண்ணம்.

மேயோ நாட்டில் "நியோகம்"

விதவை குழந்தை பெற்ற விதம்.

ஸ்ரீமதி. கிரேஸ்பர்ன்ஹாம் என்னும் 40 வயதான அமெரிக்க பணக்கார விதவை நல்ல பலமுள்ள குழந்தை யொன்றைப் பெறவேண்டுமென்று விரும்பினர். ஆனல் மறுவிவாகம் செய்து கொள்ள விரும்பவில்லை. ஆதலின் சாஸ்திரீய முறையில் பலமுள்ள குழந்தையைப் பெறும் பொருட்டு, நல்ல யௌவனமும், வன்மையும் வாய்ந்த இளைஞர் ஒருவரைத் தனது காதலனுக ஏற்றுக் கொண்டார்.

இப்போது இம் மாதுக்குப் பெண் குழந்தை யொன்று பிறந்து ஒரு மாதத்திற்கு மேலாகிறது. அக்குழந்தைக்கு வீரா என்று பெயரிட்டிருக்கிறார் ஸ்ரீமதி பர்ன்ஹாம் தமது காதலனைப் பற்றி எதுவும் கூற மறுக்கிறார் ஆனல் அவாது நண்பர்கள் வற்புறுத்துதலின் மீது, தாம் ஒழுங்காக ஏற்படுத்திக் கொண்ட திட்டத்தின்மீதே அக்காதலனுடன் சம்பந்தம் ஏற்பட்டதாகக் கூறுகிறார்.

மேலும் குழந்தை பிறந்த பின்னர் அந்த இளைஞருக்கு ஸ்ரீமதி பர்ன்ஹாமுடன் உள்ள சம்பந்தம் நீங்கிவிட்டது. அன்றியும் அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி அக் குழந்தையின் தந்தை என்னும் முறையில் அந்த இளைஞருக்குள்ள உரிமையை அவர் இழந்துவிட வேண்டியதாயிற்று. ஸ்ரீமதி பர்ன்ஹாம் தம் முதுமைப் பருவத்தில் தமக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யும் பொருட்டு ஒரு குழந்தை வேண்டுமென்று தாம் விரும்பியதனுலேயே உயர்ந்த நோக்கத்துடனேயே இந்த சாஸ்திரீய முறையைக் கைக்கொண்டதாகவும், தாம் சிறு வயதாக இருக்கும் போதே விவாகத்தை விரும்பவில்லை யென்றும், ஆதலின் மிக்க ஜாக்கிரதையுடன் ஒரு இளைஞரைத் தேர்ந்தெடுத்ததாகவும் கூறுகிறார். அம் மாது அந்த இளைஞருக்குத் தம்முடைய நிலைமையை விவரித்துக்கூறியதற்கு அவர் உதவி செய்வதாகவும், ஆனல் தன் பெயரை மட்டும் வெளியிட முடியாதென்றும் கூறினர்.

மேயோ நாட்டில் "நியோகம்"

அந்த விதவை பார்வைக்கு யௌவனம் வாய்ந்தவராகவும், அழகிய கூந்தலையும் நீலநிறக்கண்களையும், இனிய தோற்றத்தையு முடையவராய் வசீகரமாக விளங்குகிறார். அவர் இன்னமும் பிரசவ ஆஸ்பத்திரியிலேயே இருந்து வருகிறார். இந்த வேடிக்கையைப் பார்க்கத் திரளான ஜனங்கள் வந்து கூடுகின்றனர். அக்கூட்டத்தைப் போலீசார் விலக்கவேண்டியிருக்கிறது. நூற்றுக்கணக்கான பெண்கள் சாஸ்திரீய முறைப்படி பிறந்த அக்குழந்தையைக் காணவேண்டு மென்னும் ஆவலுடன் ஆஸ்பத்திரிக்குச் செல்லுகின்றனர். ஆனால் ஸ்ரீமதி பர்ன்ஹாம் அக்குழந்தையைக் காணவேண்டு மென்னும் ஆவலுடன் ஆஸ்பத்திரிக்குச் செல்லுகின்றனர். ஆனால் ஸ்ரீமதி பர்ன்ஹாம் அக்குழந்தையைக்காட்ட மறுக்கிறார்.

இப்பரீட்சார்த்த முறை நன்றாக ஆலோசிக்கப்பட்ட பின்னரே அனுபவத்தில் செய்யப்பெட்டதென்றும் ஸ்ரீமதி பர்ன்ஹாமுக்கு அவருடைய புருஷன் வைத்துச் சென்ற ஆஸ்தியைச் சிறிதும் இழக்கவில்லை யென்றும் ஸ்ரீ. பர்ன்ஹாம் லக்ஷம் பவுன் பெறுமான ஆஸ்தியை வைத்துவிட்டுச் சென்றதாகவும் அவ்விதவையின் பந்துக்கள் கூறுகின்றனர்.

சில நாட்களுக்கு முன்னர் திசமாகாமிவிற்கு சமீபத்திலுள்ள நாகமாகாவிகாரி என்னு மிடத்தில் மண்ணைத்தோண்டி வெளியாக்கிக் கொண்டிருந்த வேலையாட்கள் இரண்டு அழகான கல் விக்ரகங்களைக் கண்டு பிடித்தார்கள். அவை இரண்டும் புத்த விக்ரகங்களாகும். அவற்றில் ஒன்று பௌத்தர் உட்கார்ந்திருந்த மாதிரியாகவும், மற்றொன்று நின்றிருந்த மாதிரியாகவும் இருந்தது. உட்கார்ந்திருந்த விக்ரகம் நாலு அடி உயரமுல்ளதாயும், மற்றொன்று ஆறு அடி உயரமுள்ளதாயும் இருந்தது. இதுவரையும் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பௌத்த விக்ரகங்களைக் காட்டிலும் இது வேலைப் பாடமைந்ததாய் விளங்குகிறது. அதுவரையப் பட்டிருக்கும் சித்திர வேலையானது சுமார் 25 நூற்றாண்டுகளுக்கு முன் நடைபெற்று வந்ததாய்த் தெரிய வருகிறது. இந்த விக்ரகங்களைப் பார்க்க ஜனங்கள் வந்த வண்ணமாகவே இருந்து வருகின்றனர். இந்த விக்ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் பழைய காலத்தில் கோவில் இருந்திருக்கவேண்டுமென்று எண்ணப்படுகிறது. ஏனென்றால் கோவில் இருந்த அடையாளங்கள் தென்படுகின்றன. கோவிலின் அஸ்திவாரங்கள் அகப்படுகின்றன.

தாயின் தரிசனம்

இப்போது உலகப்பற்றுடைய மனிதரின் சங்கம் ஸ்ரீ இராமகிருஷ்ண ருக்குப் பொறுக்க முடியாததாயிற்று. இடையில் தடைகளின்றித் தாயைத் தியானிப்பயிற்குத் தனிமையான இடமொன்றை அவர் நாடினார் நல்லிரவில் எல்லாரும் உணர்வற்ற நித்திரையில் அமிழ்ந்திருக்கும்போது அவர் சத்தம் செய்யாமல் வெளியெ சென்று பொழுது புலர்ந்த பின்னரே திரும்புவார். ஓரிரவல்ல; இரண்டிரவல்ல; தினந்தோறு இவ்வாறு தன் மாமன் வெளியே போய் வருவது கண்டு ஹிருதாய் கவலையுற்றான். காலையில் திரும்பும்போது அவருடைய கண்கள் அழுது அழுது வீங்கிப்போயிருக்கும். நீண்ட நேரம் தியானத்தில் ஆழ்ந்திருந்ததாக அவர் முகக்குறி காட்டும். ஹிருதாய் இந்த மர்மத்தை அறிய விரும்பினான்.

* * * * *

தக்ஷிணேசுவரத்தில் காளி மாதாவின் கோயிலுக்கு வடக்கேயுள்ள நிலத்துக்குத் தற்போது பஞ்சவடி என்று பெயர் வழங்குகிறது. அதிலே தான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் வருஷக்கணக்காக தியானமும் தவமும் செய்தார். இப்பஞ்சவடி அப்போது அடர்ந்த காடாயிருந்தது. சப்பாத்தியும், மற்ற முட் புதர்களும் அங்கு நிரம்பியிருந்தன. சூரிய கிரணங்கள் மிக அருமையாகவே அங்கு எட்டிப்பார்க்கும். இவ்வாறு இருளடர்ந்து மேடுபள்ளமாயிருந்த அந்தப் பிரதேசத்தில் பகலில் கூட மனிதர்கள் போவதற்குப் பயப்படுவார்கள். அங்கே புதை காடு ஒன்றும் இருந்தபடியால் பேய் பிசாசு பயமானது ஜனங்களை வெருட்டி வந்தது. எனவே எவரும் அக்காட்டினுள் எட்டிப் பார்க்கவும் துணிந்தாரிலர். அங்கிருந்த பல மரங்களுக்கிடையே நெல்லிமரம் ஒன்றும் இருந்தது. ஸ்ரீ இராமகிருஷ்ணர் தமது சாதனங்களுக்கு இம்மரத்தினடியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

* * * *

ஹிருதாய் தன் மாமனுடம் உண்மை அபிமானமுள்ளவன். இரவும் பகலும் அவருடைய சுகத்துக்கான பணிவிடைகளைச் செய்துவந்தான். அவ்வப்போது அவருடைய உள்ளத்தில் அடித்துக்கொண்டிருந்த தெய்வீகப்பெரும்புயலை அவன் சிறிதளவு அறிந்தானாயிலும், பெரும்பாலும் அதை மறந்து மற்ற ஜனங்களைப் போலவே தானும் அவருக்கு அதிதீவிர பக்தியி

னால் பைத்தியம் பிடித்து விட்டது என்றெண்ணினான். உணவு, தண்ணீரைப்பற்றியும், மற்ற தேக சுகங்களைப்பற்றியும் சிறுதும் கவனியாது ஸ்ரீ இராமகிருஷ்ணர் நாளுக்கு நாள் உடல் மெலிந்து வருவது கண்டு அவன் ஏற்கனவே கவலை கொண்டிருந்தான். போதாதற்கு அவர் இப்போது இரவில் தூங்காமலிருக்கவும் தொடங்கிவிட்டார். இவற்றையெல்லாம் தேகம் எத்தனை நாள் தாங்கும்? ஆனால் தன் மாமன் பிடிவாதக்காரர் என்பதும், வாதமிடுதலும் கண்டித்தலும் பயன்படா என்பதும் அவனுக்குத் தெரியும். ஒரு நாள் நள்ளிரவில் ஸ்ரீ இராமகிருஷ்ணர் வெளிப்புறப்பட்டபோது ஹிருதாயும் பின் தொடர்ந்து சென்றான். அவர் அடர்ந்த காட்டினுள் நுழைவதுகண்டு அவன் பயங்காரத்தினால் திகைத்துப் போனான். காட்டிற்குள் அவரைத்தொடர்ந்து செல்ல அவனுக்குத் துணிவில்லை. ஆதலின் வெளியில் நின்று கொண்டே கற்களை விட்டெறிந்தான். இதனால் அவரை அச்சுறுத்தித் திரும்பி வரச்செய்து விடலாம் என்பது அவன் எண்ணம். ஆனால் இந்த யுக்தி பலியாமற் போகவே அவன் தனியாகத் தன் அறைக்குத் திரும்பினான்.

* * * *

மறுநாள் ஹிருதாய் ஸ்ரீ இராமகிருஷ்ணரைக் காட்டில் என்ன செய்கிறீர்களென்று வினவினான். "அங்குள்ள விசாலமான நெல்லி மரத்தினடியில் அமர்ந்து காளியைத் தியானிக்கிறேன்" என்று அவர் விடையளித்தார். அன்று முதல் ஸ்ரீ இராமகிருஷ்ணர் அம்மரத்தடியில் தியானத்துக்கு அமரும்போதெல்லாம் கற்கள் வந்து விழலாயின. இது ஹிருதாயின் வேலையே யென்பது அவருக்குத்தெரியும். ஆயினும் அது குறித்து அவனை ஒரு வார்த்தையும் கேட்கவில்லை. இது பயன்படாமற் போகவே ஒரு நாள் ஹிருதாய் துணிவுகொண்டு காட்டினுள் என்ன தான் நடக்கிறதென்று பார்க்கத் தீர்மானித்துச் சென்றான். மரத்தினடியில் அவன் கண்ட காட்சி அவனைத் நடுக்குறச் செய்தது. ஸ்ரீ இராமகிருஷ்ணர் உடம்பில் ஆடைகளும் பூணூலும் இல்லாமல் உட்கார்ந்து தியானத்தில் ஆழ்ந்திருந்தார். முதலில் பயங்காரத்தினால் திடுக்கிட்ட ஹிருதாய் பின்னர் தெளிந்து "இஃதென்ன? இவர் உண்மையிலேயே பைத்தியம் பிடித்தவரா? இல்லாவிடில் ஏன் இப்படி உட்கார்ந்திருக்க வேண்டும்?" என்றெண்ணினான். பின்னர் ஸ்ரீ இராமகிருஷ்ணரை நோக்கி "மாமா! இப்படிச் செய்யலாமா? ஆடையையும் பூணூலையும் தூர வைத்துவிட்டு ஏன் உட்கார்ந்திருக்கிறீர்கள்"? என்று கேட்டான். ஆனால் அவரோ சிலையாயிருந்தார். பதில் கிடைக்கவில்லை. சிறிது நேரங் கழித்து ஸ்ரீ இராமகிருஷ்ணர் உணர்வு பெற்றபோது ஹிருதாய் பக்கத்தில் நிற்பதைக் கண்டார். மீண்டும் அவன் மேற்கண்டவாறு கேட்க, பரமஹம்சர் கூறியதாவது:—"நல்லதப்பா! உனக்குத் தெரியாது. கடவுளைத் தியானிப்பதற்கு இதுதான் வழியாகும். தளைகளையெல்லாம் அறுத்துவிட வேண்டும். நமது பிறப்பிலிருந்து பகைமை, வெட்கம், குலம், கல்வி, அச்சம், புகழ், சாதி, அகங்காரம் என்னும் எட்டு வகைத் தளைகளால் நாம் பிணிக்கப்பட்டுள்ளோம். இந்தப் பூணூல் நான் பிராம்மணன்-ஆத

வின் எல்லாரானும் உயர்ந்தவன் என்பதற்கு அறிகுறியா யிருக்கிறது. தாயைத் தியானிக்கும் போது இத்தகைய எண்ணங்கள் எல்லாம் போய் விடவேண்டும். ஆதலின் பூணூலைக் கழற்றி விட்டேன். தியானம் முடிந்ததும் அதை எடுத்தணிந்து கொள்வேன்.

* * * *

இவ்வாறு, கடவுளை அறிதல் - லோகமாதாவைத் தரிசித்தல் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் தனிப்பேரவாவாயிற்று. இராமப்பிரஸாதர், கமலா காந்தர் என்னும் பக்தர்களின் பக்திச்சுவை சொட்டும் பாட்டுக்களை அவர் அடிக்கடி பாடுவார். அக்கீர்த்தனங்கள் அவர் இருதயத்தின் அணை வாயிலைத்திறந்து விடவே, அவர் தாயைப் பிரிந்த கன்றுபோல் கதறி அழுவார். அன்னையே! நீ எங்கிருக்கிறாய்? எனக்கு உன் காட்சி அருளாயோ? இராமப்பிரசாதர் உன்னைத் தரிசித்து உன் அருள் பெற்றார். நான் மட்டும் என்ன பாவஞ் செய்தேன்? சந்தோஷம், செல்வம், நண்பர்கள் சுகானுபவங்கள் இவை ஒன்றும் நான் வேண்டேன். தாயே! உன் தரிசனமே எனக்கு வேண்டும்'' என்று அவர் பரிதவிப்பார். அவர் கண்களில் நீர் ஆறாய்ப் பெருகும். மாலை நேரத்தில் கோயில் மணி அடிக்கும் சத்தம் கேட்டதும் அவருடைய துக்கம் இன்னும் அதிகமாகும். "அம்மா! இன்னொரு நாள் வீணில் போய்விட்டது. இன்னும் நான் உன்னைக் காணவில்லை. இவ்வற்ப வாணாளில் மற்றொரு பகல் கழிந்தது. நானோ இன்னும் சத்தியப் பொருளை அறியவில்லை.'' என்று அவர் கதறுவார். அளவற்ற மனத் துயரங்கொண்டு அவர் முகத்தைத் தரையில் இடித்துக்கொள்வார். அவருடைய பரிதாபமான அழுகைக்குரலைக் கேட்டவர்கள் ''பாவம்! இச்சிறுவன் உண்மையிலேயே தாயை இழந்துவிட்டானோ, என்ன? அல்லது வயிற்றுவலி உபத்திரவமோ? இருந்தாலும் இவன் அழும்போது நமக்கும் கண்ணில் நீர்வருகிறது'' என்றுபேசிக் கொள்வார்கள். மற்றொரு மனோ நிலையில் அவர் காளிமாதாவின் விக்கிரகத்தின்முன்பு உட்கார்ந்து "தாயே! நீ உண்மையிலேயே இருக்கிறாயா? அல்லதுஎல்லாம் வெறுங் கற்பனைதானோ? நீ இருப்பது உண்மையானால் உன்னை என் நான் காண முடியவில்லை? சமயம், கடவுள் என்பன வெல்லாம் உருவெளித் தோற்றமா? ஆகாயக் கோட்டையா?'' என்று கேட்பார். ஆனால் அடுத்த கணத்தில் இராமப் பிரஸாதர் முதலிய பக்தர்கள் இந்த ஜன்மத்திலேயே ஆண்டவனை நேருக்கு நேர் கண்டார்கள் என்பது அவர் ஞாபகத்துக்கு வரும். "இல்லை இல்லை. லோகமாதா மானிடர்களின் மனோ கற்பனையா யிருக்க முடியாது. அவளை நேரில் கண்டவர்கள் இருக்கிறார்கள். அப்படியானால் அவளை நான் மட்டும் என் தரிசிக்கக் கூட வில்லை? அந்தோ? வாணாள் கழிந்துகொண்டிருக்கிறது. நாட்கள் ஒவ்வொன்றாய்ப் போய்க் கொண்டிருக்கின்றன. போன நாட்கள் திரும்பி வரப்போவதில்லை. ஒவ்வொரு நாளும் மரணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்தோ! தாயை இன்னமும் நான் பார்க்க வில்லை. இல்வாழ்க்கையில் தேடத் தகுந்த பொருள் ஒன்றே. அது கடவுள் தரிசனமே என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. அவரில்லாத வாழ்க்கை வெறும் கேலிக்கூத்து. அவரை அறிந்தாலோ வாழ்க்கைக்குப்

பொருள் ஏற்படுகிறது ; அப்போது வாழ்க்கையில் இன்பப் பூங்காவனமாகிறது. ஆகையினாலேயே உண்மைப் பக்தர்கள் ஆண்டவனைத் தேடும் முயற்சியில் உலகத்தைத் துறந்து வாணாளைத் தியாகம் செய்கிறார்கள். நித்தியானந்தத்தின் அழியா ஊற்றான ஆண்டவனை அடையா விட்டால் இந்தத் துன்பவாழ்க்கை எனக்கெதற்காக?'' என்று இப்படி எல்லாம் எண்ணி எண்ணி, கடவுளைக்காணும் முயற்சியில் இன்னும் ஊக்கம் பெறுவார்.

*　　*　　*　　*

இந்த அடங்காத்தாபத்தைக் குறித்துப் பிற்காலத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ணர் தமது சீடர்களிடம் கூறியதாவது.—'' ஓ! எத்தகைய வெறிகொண்ட நாட்கள் அவை? தாயினுடைய பிரிவினால் நான் அடைந்திருந்த மனத்துயரை நீங்கள் கற்பனைசெய்தும் பார்க்கமுடியாது. ஆனால் அஃது இயற்கையேயாகும். ஓர் அறையில் ஏராளமாகத் தங்கம் இருக்கிறதென்றும், அடுத்த அறையில் திருடன் ஒருவன் இருக்கிறானென்றும் இரண்டு அறைகளுக்குமிடையே மெல்லிய சுவர் ஒன்றே இருக்கிறதென்றும் வைத்துக் கொள்ளுங்கள். அத்திருடனால் அமைதியாகத் தூங்க முடியுமா? சுவரை இடித்துத் தங்கத்தை கைப்பற்ற அவன் முயலமாட்டானா? அம்முயற்சி தடைபட்டால் அவனுக்குப் பைத்தியமே பிடித்து விடாதா? என்னுடைய நிலையும் அது போன்றே இருந்தது. நித்தியானந்த மென்னும் பெருஞ் செல்வத்துடனே தாய் எனக்கு மிகவும் அருகாமையிலேயே இருந்தாள். அச்செல்வத்துடன் ஒப்பிடுகையில் இவ்வுலக சம்பத்துகள் எல்லாம் எம்மாத்திரம்? இந்நிலையில், நான் அவளைத் தேடிக்காணமுயலாமல் எப்படித் திருப்தியடைந்திருக்க முடியும்? ஆகையினாலேயே நான் வெறிகொண்டவனானேன்.

*　　*　　*　　*

எத்தகைய அபார நம்பிக்கை! இந்நம்பிக்கை மலைகளையும் அசைத்து விடக் கூடிய தன்றோ? அவருடைய நம்பிக்கைக்கும் நம்போன்ற மனிதரின் நம்பிக்கைக்கும் எத்துணை வித்தியாசம் பாருங்கள்! எத்தனையோ சோதனைகளிலும், துயரங்களிலும் அவர் சோர்ந்துவிடாமல் வெளிவருவதற்கு வலிமை தந்ததுயாது? அவருடைய துன்பங்களை யெல்லாம் தன்னுடைய ஸ்பரிச மாத்திரத்தினாலேயே இன்பங்களாகச் செய்துவந்த சஞ்சீவியாது? அவர் உலக சுகங்களை யெல்லாம் துறந்து தவ வாழ்க்கையை மேற் கொள்ளும்படி செய்த அரிய சக்தி யாது? இறைவனிடம் அவர் கொண்டிருந்த தளராத நம்பிக்கையேயாகும். ஆனந்த நிலையமான அரும் பொருள் அவ்வாண்டவனே என்னும் உறுதியேயாகும். இந்த நம்பிக்கையானது, உலகின் பாரமார்த்திக சரித்திரத்தில் மகத்தான அற்புதங்களை விளைத்திருக்கிறது. குருவாதல், வேறு துணையாதல் இல்லாமல் சாஸ்திரங்களின் விஸ்தாரமான அறிவில்லாமல், தவத்துறைக் கேற்பட்ட சாதனங்களையும் பயிலாமல் ஸ்ரீ இராமகிருஷ்ணர் தமது அசையாத நம்பிக்கை. தளராத பக்தி இவற்றின் வலிமை கொண்டே யன்றோ எல்லா இடையூறுகளையும் வீழ்த்திக்கொண்டு சென்று வெற்றி யடைந்தார்?

இந்நாளில் அவரால் ஒழுங்காகக் கோயில் பூசையும் செய்யமுடிய

வில்லை சில சமயம் விக்கிரகத்தின் முன்னால் தாமும் ஒரு விக்கிரகமாய் அவர் உட்கார்ந்து விடுவார். ஒரு நிமிஷம் பைத்தியக்காரனைப்போல் பிதற்றுவார். அடுத்த கணத்தில் குழந்தையைப்போல் அழுவார். தாய்க்கு நைவேதனம் செய்யும்போது அவள் உண்மையிலே அமுதருந்துவதாக எண்ணி வெகுநேரம் உட்கார்ந்திருப்பார். தீபாராதனை செய்யும்போது சிலசமயம் மெய் மறந்து விடுவார். எனவே தீபததைக் கீழே வையாமல் மணிக்கணக்காய் நின்றுகொண்டிருப்பார். இந்த விநோதங்களைக் கண்டவர்களில் பலர் அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்ட தென்றார்கள். ஒரு சிலர் அவருடைய பக்தியை வியந்தார்கள். ஆனால் ஸ்ரீ இராமகிருஷ்ணரோ ஜனங்கள் தம்மைப் பற்றி என்ன சொல்கிறார்களெனக் கவனித்தாரிலர். அவர் உள்ளமெல்லாம் ஒரே இலட்சியத்தில் ஈடுபட்டிருந்தது. பசி, தூக்கம் நாளுக்கு நாள் குன்றின. தாபமிகுதியால் அவர் முகம் எப்போதும் சிவந்திருந்தது. கண்களில் நீர் வழிந்த வண்ணம் இருந்தது. கடைசியாக ஒரு நாள் லோகமாதா அவருடைய மனோரத்தை ஈடேற்ற வைத்தாள். தாயை முதன் முதல் தாம் தரிசித்ததைப் பற்றி ஸ்ரீ இராமகிருஷ்ணரே பின் வருமாறு சொல்லியிருக்கிறார் :—

*　　*　　*　　*

"தாயைக் காணவில்லையே என்று அளவிறந்த துன்பககடலில் ஆழ்ந்திருந்தேன். ஈரத்துணியைப் பிழிவது போல் தன் இருதயத்தை யாரோ பிழிவதாகத் தோன்றிற்று. இந்த ஜன்மத்தில் தாயைக்காணும் பாக்கியம் பெறமாட்டேனோ என்றெண்ணித் துடித்தேன். பிரிவு இனிப் பொறுக்க முடியாதாயிற்று. இவ்வாழ்க்கை எதற்காக என்றெண்ணினேன். அப்போது கோயிலில் தாய்க்கருகில் வைக்கப்பட்டிருந்த வாளின்மீது என் பார்வை விழுந்தது. பைத்தியக்காரனைப் போல் நான் குதித்தோடி அந்த வாளை எடுத்து என்னை வெட்டிக்கொல்லப் போனேன். அந்த க்ஷணத்தில் லோகமாதா எனக்குத் தரிசனமளித்தாள். உடனே உணர்வற்றுத் தரையில் விழுந்தேன். அதற்குப்பின்னர் இரண்டு நாள் வரை வெளியில் நடந்தவைகளைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் எனக்குள்ளே புத்திப் புதியதான பரமானந்த வெள்ளம் பெருகி ஓடிக்கொண்டிருந்தது. லோகமாதா சாக்ஷாத்சாரமாய் என்னெதிரில் இருப்பதை உணர்நதேன்.

*　　*　　*　　*

இந்நிகழ்ச்சியைப்பற்றி மற்றொருமுறை அவர் கூறிய விவரமாவது :- "கோயில் கட்டிடங்களும், என்னைச் சூழ இருந்த பிற பொருள்களும் திடீரென்று மயங்கி அடியோடு மறைந்து போயின. அவை இருந்த இடத்திலே எல்லையற்ற, அளவுக் கடங்காத. ஜோதிப் பெருங்கடல் கண்ணுக் கெட்டிய தூரம் பரவி நிற்பதைக் கண்டேன். அக்கடலிலே ஒளி மயமாய்த் திகழ்ந்த பேரலைகள் எழுந்து விழுந்து இரைந்து அதிவேகமாக என்னை நோக்கிப் பாய்ந்து வந்தன. கண்மூடிக் கண் திறக்கும் நேரத்தில் நாலா பக்கங்களிலிருந்தும் அவ்வொளி அலைகள் வந்து என்மீது மோதி மூழ்கடித்தன. நான் மூச்சுத் திணறிப் போனேன். அடுத்த க்ஷணத்தில் உணர்விழந்து விழுந்தேன்."

லக்ஷ்மி

சந்தா விவரங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	0	0
தென்னாபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	8	0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ.	40	0	0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ.	50	0	0

விளம்பர விகிதங்கள்.

முழுப்பக்கம் (மாதம் 1-க்கு)	ரூ.	8	0	0
அரைப்பக்கம் ஷை	ரூ.	4	0	0
கால்பக்கம் ஷை	ரூ.	2	8	0

சிறந்த வாசனை

ஊது வத்திகள் !

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! சேர் ஒன்றுக்கு 24 ரூ. எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி	சேர் 1-க்கு	6—0—0
அம்பர் வத்தி	,, 1-க்கு	5—0—0
கிலீட் வத்தி	,, 1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி	,, 1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & Co.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99, MADRAS.

தென்னிந்தியாவில் நிகரற்ற,

ஆதிபரிமளச்சாலை.

(1800-ம்-ஞூ ஸ்தாபிக்கப்பட்டது)

இது இராஜக்கள், ஜமீன்தார்கள். கோடீஸ்வார்கள் ஜனத்தலைவர்கள் டாக்டர்கள், வியாபாரிகள் முதலியோரால் ஆதரிக்கப்பட்டது.



K. தாவுத் ஸாஹிப்.

இவர், அனேக கண்காக்ஷிகளில் தங்கம், வெள்ளி மெடல்கள் பரிசளிப்பும் நற்சாக்ஷிப் பத்திரங்களும், சென்னை எச். ஈ. தி. கவர்னரவர்களின் நன்கு மதிப்பும், அநேக கனவான்களின் நற்சாக்ஷி சோதனை பத்திரங்களும் பெற்று மான் மார்க்கு அடையாளமுடன் அடியிற்கண்டுள்ள சகல வாஸனை திரவியங்களால் நற்கியாதியும் பெற்றவர்.

வாஸனை சாமான்களின் விபரம்: உலகப்பிரசித்திபெற்ற,

ஆதி சந்தனாதித் தைலம்.

இது மூளைக்காதாரமானது. ஜெகத்தோர் மெச்சும்,

அரைக்கீரைவிதைத் தைலம்.

இது பித்தோஷ்ண நிவாரணி.

இவையன்றி, மேலானவாசனை யுள்ளவைகளாவன:—ஜவ்வாது, புனுகு, அறகஜா, அம்பர், பலவித வில்லை தினுசுகள், தூரதேச அத்தர் வகைகள், கஸ்தூரி, அம்பர், ஜவ்வாது பன்னீர், புனுகு அகர் முதலிய பத்தி தினுசுகள், மேல்நாடுகளின் ஸெண்ட் தினுசுகள், கூந்தல் வளர் தைலங்கள், பன்னீர் வகைகளும், சந்தன வில்லை, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை. அற்புத பற்பொடி, சந்தனப் பவுடர், கேஸரி பவுடர், தஸாங்கம், விலைக்கேற்ற கலப்பு சந்தனம், குல்கந்து பருவு நிவாரணி, வாசனைப் பாக்கு. சுண்ணாம்பு, கொப்பரைச் சீவல், ஸ்நானப் பவுடர், தங்கம் வெள்ளி ரேக்கமைந்த எலங் கிராம்பு வகையரா, சுருள் நைஸ் கொட்டைப் பாக்கு சீவல், மதுரைப்பிள்ளை ஊறுகாய் முதலியவைகள் மான் மார்க்கு அடையாளமுடன் எங்களிடம் கிடைக்கும்.

விபரமான காட்லாக் தேவையானால் கிடைக்கும், பல இடங்களில் தகுந்த ஏஜண்டுகள் தேவை. ஒருமுறை வாங்கி பரீக்ஷித்துப் பாருங்கள்,

K. தாவுத் ஸாஹிப் அண்டு ஸன்ஸ்

30 வருடகாலமாய் உலக பிரசித்தி பெற்ற

வைத்யரத்ன பண்டிட் D. கோபாலாச்சார்லு அவர்களின்

ஜீவாமிருதம்

ஆரோக்கியத்தையும், தைரியத்தையும், உண்டாக்கும். பலத்தையும் உற்சாஹத்தையும், விருத்தியாக்கும்.

ரத்தத்தை விருத்தியாக்கும், மேகவாதநோய்களை போக்கடிக்கும், எல்லாவித பலஹீனங்களையும் போக்கும்ரோகிகளுக்கு நல்லது, மாரதிர்ச்சியை போக்கும், கர்பகாரகங்களை நீக்கும், குழந்தைகளுக்கும் கர்பவதிகளுக்கும் உத்தமம், மூலைப்பாலை விருத்தியாக்கும், மூர்ச்சைகளுக்கு நல்லது மூளைக்கு வலுவை யுண்டாக்கும், நரம்புகளுக்கு வலிவை ஜாஸ்தி கொடுக்கும், வித்யார்த்திகளுக்கு பிராணமித்திரமானது, பிராண சக்தியை ஜாஸ்தியாக்கும் க்ஷயரோகிகளுச்கு மிகவும் நன்று, காஸரோகிகளுக்கு அமுர்தம் போன்றது, மாருக்கு அதிகபலத்தை கொடுக்கும், ஸ்வாசப்பைகளுக்கு அதிக பலமுண்டாக்கும், உப், பஸ ரோகிகளுக்கு ரெம்பவும் ஹிதம்.

ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும், லோஹங்களாலும் தயார் செய்யப்பட்டது.

விலை புட்டி 1-க்கு ரூபா 3—4—0.

உபயோகவிதி மருந்துடனனுப்பப்படும்.

முழுவிபரம் அடங்கிய கேட்லாக் இனமாய் அளிக்கப்படும்.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, Post Box 287, Madras.

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்

ஷண்முகம்

பட்டணம்பொடி

காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது.

அநேக
மெடல்கள்
நற்சாட்சி
பத்திரங் ள்
பெற்றது.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட,
போஸ்டு பாக்ஸ் 140, மதரூஸ்.

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்ருடம் நூற்றுக் கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினதோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிராமம் முதல் குக்கராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம். இன்புறும் காரம், பவுன் நிறம் மனோரம்மியம் இவ்வாறும் ஒருங்கே அமையப் பெற்றதினுல் ஷண்முகம் என பெயர் பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோ பீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அகல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்!

பலம்.		விலை.	தபால்சிலவு.	பாக்கிங்.	மொத்தம்.
8	ரூ.	1 0 0	0 5 0	0 1 0	1 6 0
20	,,	1 12 0	0 8 0	0 2 0	2 6 0

டாக்டர். ஆர். கே. பரிமள ழக்குத்தூள். இதனுல் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைகுததல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணு சாதா மூக்குத் தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுவதும் சுகந்தமாய் விடும்.

1-புட்டி 1-க்கு அணு 4. டசன் புட்டிகள் ரூ. 2-4-0.
ஒரு சேர் டின் ரூ. 1-8-0.

இதர சாமான்கள் வேண்டுமானுல் எங்களுக்கு விலை விபரம் எழுதவும்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பனி, (லிமிடேட்)
போஸ்டு பாக்ஸ் 140, மதரூஸ்.

A. S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்குமேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4 டை டஜன் 1-க்கு ரூ. 2-4 டை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3 டை டஜன் 1-க்கு ரூ. 2 டை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்.

கையிலிருந்தாலும் அழகு !

பன்னிரு இதழ்களையும் ஒன்றாய்ச் சேர்த்து பைண்ட் செய்யப்பட்ட "லக்ஷ்மி" ஆண், பெண், சிறியோர், பெரியோர் முதலிய யாவரும் படித்து இன்புறக்கூடிய, கதைகள், நாவல்கள், பாடல்கள், ஹாஸ்யக் குறிப்புகள் முதலியவை அடங்கி யிருக்கின்றன. லக்ஷ்மியின் சந்தா நேயர்களுக்கும் பயன்படக்கூடியது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்து வரவழைத்து, உங்கள் வாசக சாலையை அழகுப்படுத்துங்கள்.

1-வது வால்யம்	விலை ரூ. 3—0—0.
3-வது வால்யம்	விலை ரூ. 3—0—0.

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி, :: :: சென்னை.

குழந்தைகளை : :

: : நேசியுங்கள்!

அழுகிற குழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப்போன்றவடிவுள்ளவை, ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு, மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும், மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0

நெ. 2 ,, ,, விலை ரூ. 3—4—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

ஸில்க் ஹவுஸ் : :: காசி

இனும் ! இனும் !

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட

Self filling பௌண்டன் பேனு இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனு இனுமாய் அனுப்பப்படும்.

கெடியாரம் விலை ரு. **4-12-0.**

5 வருஷம் உத்திரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின்பேரிலும் சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே இக்கயிற்றின் (Wire) உதவியால் இதை எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் அணையாது. விசேஷ காலங்களில் இதை வைத்தால் அதிசயத்தைப் பார்ப்பதற்கு ஜனங்கள் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாகப் பாக்கிங் செய்து அனுப்பப்படும்.

பாட்டரியுடன் லைட் விலை ரு. **4-8-0.**

தபால் செலவு **0-8-0.**

தி பான்ஸி வாட்சு அவுஸ். 15, A பீட், ஜி. டி. மதராஸ்

நல்ல சமயம் ! வாங்கத் தவறாதீர்கள் !

பாரீஸ் லேடிகளின் அழகிய போட்டோ படங்கள்.

இதில் பாரீஸ் லேடிகளின் அழகும் விநோதமும் காணலாம். பார்க்கப் பார்க்கத் தெகட்டாத கண் காக்ஷியாகும். படுக்கை யறையில் ஜோடிக்க வெகு சுந்தரமாயிருக்கும். உண்மையான பாரீஸ் படங்கள் நம்மிடந்தான் உண்டு.

பல ரகமுள்ள 1 டஜன் செட்டுக்கு ரு. **3-0-0.**

பாரீஸ் எம்போரியம்,

ஜி. டி. மதரா.

ஹாமுனியோஹா

சில்க் அங்கவஸ்திரம்.

அழகான இமிட்டேஷன் சில்க், கலருக்கு உத்திரவாம்த வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டுக்குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா 2—4—0.

விலை ரூபாய் இரண்டேகால்தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6-மாதத்திற்குள் 50,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப மறு ஆர்டர் ஒரு டஜனுக்குச் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99, சென்னை

நூல் புடவையிலும் ஓர் நூதனம்!

கராச்சி நூல் புடவைகள்

அழகான ஜரிகை முகதலையுடன் கூடியது. தினசரி சலவை செய்து உபயோகிக்கலாம், ரூ. 80—100—விலையுள்ள புடவைகளிலிருக்கும், கரைகள்போல் ஜரிகையினால் கொடி செடி போட்டது. சிகப்பு, அரக்கு, பச்சை, கருப்பு, புளூ, ஸ்னப் முதலிய கலர்கள். கலருக்கு உத்திரவாதம்.

18 மு $\times 2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 12.

K. S. Muthiah & Co.

Post Box 99, : : MADRAS.

21037
21037

கராச்சி பேட்டர்ன் சில்க் புடவை

இந்தப் புடவையின் உடல் சாதா, விளிம்புக் கரைக்கு ஜரிகையினால் "கிளாவர்" "உத்ராக்ஷம்" "சங்கிலித் தொடர்" முதலியவை மாதிரி நெசவு செய்தது. முகதலைக்கு 4" ஜரிகை பட்டைக் கரை யுள்ளது. சிறிய கரை யுள்ள புடவைகளை விரும்பும் ஸ்திரீகளுக்கு இந்தப் புடவை மிகுந்த திருப்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்கு மென்பதில் சந்தேகமில்லை!

No. 1.	16 மு x 44 இஞ்சி	புடவை	1	ரூ. 38—0...0
	18 மு x 44 இஞ்சி	,,	1	ரூ. 44—0—0
No. 2.	16 மு x 44 இஞ்சி	,,	1	ரூ. 30—0—0
	18 மு x 44 இஞ்சி	,,	1	ரூ. 36—0—0

பெங்களூர் பேட்டர்ன் புடவை

பெங்களூர் புடவை மாதிரி 4 கரையும் முகதலைப்பு முள்ளது. உடல் நெசவு அழுத்தமா யிருப்பதோடு மிருதுவாகவும், பளபளப்பாயு மிருக்கும். கரையில் இரட்டை ஜரிகை உத்ராக்ஷம் திராக்ஷைக் கொடி (Lacha) முதலியவை நெசவு செய்யப்பட்டது.

16 மு x 44 இஞ்சி	புடவை	1	ரூ. 52—0—0
18 மு x 44 இஞ்சி	,,	1	ரூ. 60—0—0

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, **MADRAS.**

Show room 287, Esplanade. ***Phone: No. 2693.***

முத்தையாஸ் - -

- நியூமாடல் புடவை

ஒன்று வாங்க மறந்துவிடாதீர்கள்

நவீன நாகரீகத்திற் கேற்ற மாதிரியில் புதிதாகச் செய்யப்பட்ட புடவை. அழகான 1-அல்லது 1½ இஞ்சி ஜரிகை வேலைக் கரையுடனும், 6 முதல் 8 அங்குலம் வரையுள்ள ஜரிகை முந்தாணியுடனும் கூடியது. கண்ணைக் கவரும் பிங், ரோஸ், பச்சை, கத்தரிப்பூ, ஊதா, வெள்ளை, ஸ்கைப்புளு முதலிய பல கலர்களில் கிடைக்கும். உடல் அழுத்தமாகவும், நைவலாகவும், பளபளப்பாகவும், நீடித்த உபயோகிப்பிற்கு வரக் கூடியதாயு மிருக்கும்.

16 மு x 44" புடவை 1-க்கு ரூ. 45 முதல் 80 வரை.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, - - - MADRAS.

Show room : 287, Esplanade. *Phone : No. 2693.*

Printed at Muthiah Press, Madras and Published by K. S. Sundarar.